உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-149

நவம்பர் 1-15 2022

www.aanmeegamalar.com

e-magazine



விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

தோப்புகரணம் போட்டால் எண்ணியது நிறைவேறுமா?

www.aanmeegamalar.com

## கிரகண நாட்களில் நோன்பு, தியானம் செய்வது ஏன்?

# வீட்டு வாசலில் மஞ்சள் பூசி வழிபடுவது எதற்காக?




வீட்டில் மகாலட்சுமி வாசம் செய்வதால் வீடு சுத்தமாக இருக்க வேண்டும் என்று நமது முன் னோர்கள் சாஸ்திரம் வாயிலாக கூறியுள்ளனர்.

ஆனாலும், வீட்டின் இதயப் பகுதி போன்று விளங்கும் நிலைவாசலிலும் தெய்வம் குடியிருப்ப தாக சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளது, வீட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அதே அளவிற்கு நிலை வாசலிற்கும், கதவிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

வீட்டின் தலைவாசலில் எட்டு லட்சுமிகளும், கதவில் குலதெய்வமும் வாசம் செய்வதாக ஐதீகம்.

இதனால்தான் வாசலில் தலைவைத்து படுக்க கூடாது என்றும், அவ்வாறு செய்தால் தரித்திரம் ஏற்படும் என்று முன்னோர்கள் கூறினர்.

மேலும், தலைவாசலில் கால் வைத்து நிற்கக் கூடாது. அங்கு நின்று தும்முவது, தலை வாருவது போன்றவற்றை செய்தால் வீட்டில் தரித்திரம் உண்டாகும் என்றும் கூறினர்.

முக்கியமாக, நிலைவாசலில் வாசம் செய்யும் எட்டுவித லட்சுமிகளை அவமதிப்பது போன்று மேற்கண்ட செயலை செய்தால், குடும்பத்தில் பணவரவு தடைபடும். வீட்டின் உள்ளவர்களுக்கு மன நிம்மதி கெடும்.

தீய சக்திகள் வீட்டிற்குள் நுழைவதற்கு வசதியாக அமைந்து விடும் என்ற காரணத்தால் நிலைப்படி மற்றும் கதவிற்கு முக்கியத்துவம் தந்தனர் நமது முன்னோர்.

இவ்வாறு தலைவாசலில் நாம் செய்வதால் வீட்டை பாதுகாக்கும் தெய்வங்கள் செயல்பட முடியாமல் போய்விடும்.

கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவர் நம்மு டைய குலதெய்வம் தான். அதனால் தான் எப்போதும் நம் வீட்டின் கதவுகளில் குடியிருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சில சமயங்களில் நமக்கு தெரியாமல் நாம் சில நேரங்களில் நமக்கு வரும் ஆபத்துக்கள் விலகியதை அடுத்து தலைக்கு வந்தது தலைப் பாகையோடு சென்று விட்டது என்று கூறுவோம்.

நம்முடைய பல கஷ்டங்களில் இருந்து குலதெய் வம் நம் துணையாக இருந்து பாதுகாப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இனியாவது நமது வீட்டு வாசலின்நிலைப் படியில் மஞ்சள் பூசி பொட்டுவைத்து வழிபடு வதுடன், குலதெய்வம் குடியிருக்கும் கதவில் விநாயகர் போன்ற பொதுதெய்வங்களின் முத் திரை, உருவத்தை பதிந்து வணங்குவோம்.

## வைஷ்ணவி தேவியாக மாறிய

# விஷ்ணு பக்தை திரிகுடா



திருப்பதி வெங்கடாசலபதி கோயிலுக்குப் பிறகு மிகவும் அதிகமாக வழிபடப்படும் கோவிலாக திகழ்வது, வைஷ்ணவி தேவி கோவிலாகும். திருப்பதிக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

மாதா வைஷ்ணவி தேவி, மாதா ராணி, வைஷ்ணவி போன்ற பெயர்களால் அழைக்கப்படும் மிகவும் புனிதமான இந்து சமய பெண் தெய்வமாவார். வைஷ்ணவி தேவி கோவில் சக்தி வழிபாட்டிற்கு மிகவும் பெயர்பெற்ற புனிதத் தலமாகும், இந்த கோவில் இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வைஷ்ணொ தேவி மலையில் அமைந்துள்ளது. கோவில் வட இந்தியாவில் மிகவும் போற்றப்படும் வழிபாட்டுத்தலங்களில் இதுவும் ஒன்றாகும். இக்கோவில் 5,200 அடிகள் உயரத்திலும், கத்ரா என்ற ஊரிலிருந்து சுமார் 12 கிலோமீட்டர் (7.45 மைல்கள்) தொலைவிலும் அமைந்துள்ளது.ஆண்டுதோறும் சுமார் 8,00,000 பக்தர்கள் வைஷ்ணவி தேவி கோவிலுக்கு அன்னையின் அருள் வேண்டி வந்து தமது காணிக்கைகளைச் செலுத்துகின்றனர்.

இக்கோவிலை ஸ்ரீ மாதா வைஷ்ணவி தேவி கோவில் குழு பராமரித்து வருகிறது. உதம்பூர் என்ற இடத்தில் இருந்து கத்ரா வரை புனித

யாத்திரை மேற்கொள்வதற்காக இரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. விமான போக்குவரத்தும் உள்ளது.

புராண வரலாறு திரேதா யுகத்தில், தீமை மற்றும் கொடுங்கோன்மை ஆட்சியால் பூமி சுமை யாக இருந்தபோது, முப்பெரும் தேவியரும் ரேமா (லட்சுமி), உமா (காளி) மற்றும் வாணி (சரஸ்வதி) ஆகிய வடிவம் கொண்டு வைஷ்ணவி தேவியை உருவாக்கினர்.

ஒளிப்பிழம்பு வடிவிலான தேவி திரிகூட மலை உச்சியில் உள்ள குகையில் தோன்றினார். பூமிக்கு சுமையாக இருந்த தீமை மற்றும் பேய் களை அழித்தபின், வைஷ்ணவி தேவி பூமியில் வசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார், இதனால் அவள் மனித அவதாரம் எடுக்க முடிவு செய்தாள்.

அதன்படி இந்தியாவின் தெற்கு பாகத்தில் நீண்ட நாட்களாக குழந்தை பேறு கிடைக்காமல் வாழ்ந்து வந்த ரத்னாகர்சாகர்சம்ரிதி தேவி தம்ப தியர் வீட்டில் அன்னை வைஷ்ணொ தேவி பிறந் தார்.

குழந்தைப்பருவத்தில் அன்னை வைஷ்ணொ தேவி, திரிகுடா என அழைக்கப்பெற்றார். விஷ்ணு வின் தீவிர பக்தரான ரத்னாகர் அவரது குழந்தை பெருமாளின் அவதாரமாகக் கருதப்பட்டதால் அவர் வைஷ்ணவி என நாமம் சூட்டினார்.

திரிகுடாவிற்கு 9 வயது நிரம்பியதும், அவர் கடற்கரை அருகே கடும் தவம் மேற்கொள்ள தந்தையிடம் அனுமதி கேட்டார். திரிகுடா ராமர் ரூபத்தில் விளங்கும் பெருமாளை மிகவும் தீவிரமாக வழிபட்டார். ராமர் தமது படைகளுடன் சீதையைத் தேடிக்கொண்டு கடற்கரை ஓரமாக வந்தார். அவரது கண்கள் ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் தெய்வீக அம்சம் பொருந்திய பெண்ணின் மேல் விழுந்தது.

திரிகுடா ராமரிடம் அவரை தனது கணவராக ஏற்றுக்கொண்டதாகக் கூறினார். ராமர் அவரிடம் இந்த அவதாரத்தில் அவர் தமது மனைவியான சீதைக்கு மட்டுமே நேர்மையான கணவனாக இருக்க உறுதி பூண்டிருப்பதாக அறிவித்தார்.

இருந்தாலும் என்றேனும் ஒருநாள் அவரை மணந்து கொள்வதாக வாக்களித்தார். அதே சமயத்தில் ராமர் திரிகுடாவிடம் வட இந்தியாவில் நிலை கொண்டுள்ள மாணிக்க மலையில் அமைந்துள்ள திரிகுடா மலைத்தொடரில் உள்ள குகையில் தவம் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அன்னை அவர்கள் 'நவராத்திரி'யின் பொழுது ராமர் ராவணனுக்கு எதிராக வெற்றி காண்பதற்காக நோன்பு மேற்கொண்டார். இந்த தொடர்பை நினைவு கூறுவதற்காகவே நவராத்திரியின் ஒன்பது நாட்களில், மக்கள் இராமாயணத்தைப் படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். ராவண வதம் நடந்த பிறகு அயோத்தியின் அரச ராக பதவியேற்றுக்கொண்ட ராமர் ஒரு முதியவர் ரூபம் கொண்டு திரிகுடா தேவி முன் தோன்றி அவரை மணந்து கொள்ளும்படி வேண்டினார். வந்திருப்பது யாரென அறியாத தேவி அவரை நிராகரித்தார்.

பின்னர் உண்மை உருவில் வெளிவந்த இறைவன் இப்பிறவியில் ஏகபத்தினி விரதம் பூண்டிருப்பதாகவும் கலியுகத்தில் அவர் மீண்டும் கல்கி அவதாரம் எடுக்கப்போவதாகவும், அப்போது அவரை திருமணம் செய்து கொள்வதாகவும் வரம் அளித்தார். மேலும் திரிகுடா மிகவும் புகழ்பெற்ற அன்னை வைஷ்ணவி தேவியாக மாறுவார் மற்றும் என்றென்றைக்கும் அமரராக நிலைத்திருப்பார் அனைத்து உலகமும் அன்னை வைஷ்ணவி தேவியின் புகழைப்பாடுவார்கள் எனவும் வரமளித்தார்.

அமைவிடம் வைஷ்ணவி தேவி மலைக் கோயில் ஜம்மு நகரத்திலிருந்து 40 கி.மீ., தொலைவில் உள்ள, கட்ரா எனும் நகரத்திற்கு அருகில் 13 கி.மீ., தொலைவில், இமயமலையில் அமைந்துள்ளது. இக்கோயில் இமயமலையில் 5,200 அடி உயரமுள்ள திரிகூடமலையின் உச்சியில் இருக்கும் இந்த புனித குகைக்கோயில், முப்பெரும் தேவியர்களான இலக்குமி, சரசுவதி மற்றும் காளி ஆகியோரின் உறைவிடமாகும். ஜம்முவிலிருந்து 42 கி.மி. தொலைவில் இருக்கும் இந்த குகை, 30 மி. நீளத்தையும், 1.5 மீ. உயரத்தையும் கொண்டுள்ளது. இந்த குகையின் முடிவில் சூலத்தின் மூன்று முனைகள் போல மூன்று பாறைகள் சுயம்புவாக உள்ளது அது முப்பெரும் தேவியர்களான இலக்குமி, சரசுவதி மற்றும் காளி ஆகியோரின் அருவ வடிவமாகும். பிந்தி என அழைக்கப்படும் அந்த வடிவங்களே மாதா ராணியாக வணங்கப்படுகிறது.

மேலும் உயரமான மலை என்பதால் பிராண வாயு குறைவாக இருக்கும். எனவே நுரையீரல் நோய் உள்ளவர்களுக்கும், அதிக இரத்த அழுத் தம் உள்ளவர்களுக்கும், கோயில் நிர்வாகம் ஆங்காங்கே மருத்துவர்களும், மருத்துவ வசதிகளுடன் கூடிய முதலுதவி மையங்கள் அமைத்துள்ளனர்.

மலையில் நடக்கவும், குதிரைகள் மீது ஏறி பயணிக்க முடியாத பக்தர்களின் நலன் கருதி கோயில் நிர்வாகம் வைஷ்ணவ தேவி மலைகோயிலுக்கு செல்ல ஹெலிகாப்டர் வசதி செய்துள்ளது.

# எரிந்த விளக்கு திரியை என்ன செய்வது?



தினமும் வீடுகளில் விளக்கேற்று பவர்கள், விளக்கெரிந்து மீந்துபோன திரியை என்ன செய்வது என்று யோசிப்பதுண்டு.

விளக்கு ஏற்றிய திரியை அப்படியே விட்டு விட்டால் அதன் நிறம் பச்சை நிறமாக மாறிவிடும்.இதுபோல் திரி பச்சை நிறமாக மாறினால் வீட் டிற்கு அவ்வளவு நல்லதல்ல.

ஒருசிலர் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் விளக்கேற்றுவார்கள், இவர்கள் வீட்டு விளக்கிலும் திரியும் எண்ணெய் யும் பச்சை நிலத்தில் பாசி படிந் ததை போன்று படிந்திருப்பதை பார்த்திருப் பார்கள்.

இவ்வாறு பாசி பிடித்ததைப் போன்று காட்சியளிக்கும் விளக்கை மீண்டும் மீண்டும் ஏற்றும் போது, இது வீட்டில் பண தடையை உண்டாகும்.

நிறைய பேருக்கு இது தெரிவதில்லை.

அதே போல விளக்கு ஏற்றிய திரியை எந்த காரணம் கொண்டும் எரிந்து கருகி விடுமாறு செய்துவிடக் கூடாது.

திரி கருகினால் வீட்டில் நிச்சயம் பிரச்சனைகள் வரும் என்பார்கள். பின்னர் அந்த திரியை என்னதான் செய்வது? என்ற மன நிலையில் பலர் கேள்வியை கேட்பார்கள்.

திரி கருகும் முன், எண்ணெய் காலியாகும் முன் மலர்களால் விளக்கு தீபத்தை அணைத்து விடுவது தான் நல்லது.

வாயால் ஊத கூடாது. ஒற்றை திரியாக போடக் கூடாது. எப்போதும் இரண்டு திரிகளை இணைத்து தான் போட வேண்டும்.

மீண்டும் மறுநாள் விளக்கேற்றும் பொழுது அதே திரியில் ஏற்றலாம் தவறில்லை. திரி கருகி விட்டால் அல்லது நிறம் மாறி விட்டால் மட்டும் அதை மாற்றினால் போதுமானது.

தினமும் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

இப்படி பச்சை நிறமாக மாறிய/கருகிய திரி களை குப்பையில் வீசக்கூடாது. திரியை குப்பை யில் போட்டால் வீட்டில் இருக்கும் மகாலட்சுமி வெளியே சென்று விடுவாள். இந்த தவறையும் ஒருபோதும் செய்யாதீர்கள்.

தினமும் திரியை மாற்றுபவர்களாக இருந் தாலும், அல்லது வாரம் ஒரு முறை மாற்றினாலும், எரிந்த திரிகளை சேர்த்து வைக்க வேண்டும்.

கொஞ்சம் திரிகள் சேர்ந்ததும் வீட்டில் இருக்கும் அனைவரையும் கிழக்கு முகமாக பார்த்து உட்கார வையுங்கள். அந்த திரிகளை தூப காலில் போட்டு கொள்ளுங்கள்.

பின்னர் அப்படியே அனைவரையும் சேர்த்து வலமிருந்து இடமாக மும்முறை மற்றும் இடமிருந்து வலமாக மும்முறை திருஷ்டி கழித்து விடுங்கள்.

திருஷ்டி கழித்து முடிந்ததும் வீட்டு வாசலில் வைத்து அதனை கொளுத்தி விடுங்கள்.

முழுக்க எரிந்து முடிந்ததும், வீட்டில் இருக்கும் துஷ்ட சக்திகள் அனைத்தும் இந்த நெருப்பில் பஸ்பமாகிவிடும்.

உங்களை சுற்றியுள்ள எதிர்மறை ஆற்றல்கள் எல்லாம் இந்த தீயில் வெந்துவிடும்.

திரிகள் கருகி கரியாகி முடிந்ததும் அதனை கால் படாத இடத்தில் போட்டு விடுங்கள்.

இதனால் உங்களுக்கு இருக்கும் அத்தனை கஷ்டங்களும் தீரும். வீட்டில் நேர்மறை ஆற்றல் ஊடுருவும். நல்ல எண்ணங்களும், சிந்தனைகளும் மலரும்.

எடுத்த காரியங்களில் வெற்றி உண்டா கும். இதனை இரவு சாப்பிட்டு முடித்த பின்னர் தூங்க செல் லும் முன் செய் வது நல்லது.



www.aanmeegamalar.com




## பாம்புகளுடன் விளையாடிய சித்தர்

# தானே உணவு தயாரித்து பரிமாறி பக்தர்கள் குறை தீர்த்த அற்புதம்

தமிழகத்தில் பல்வேறு மகான்களும் சித்தர்களும், யார் என்றே தெரியாமலேயே, தங்களை வெளி உலகிற்கு காட்டிக் கொள்ளாமலேயே சமாதி ஆகியுள்ளனர்.

அந்த வகையில்... சென்னை திருவான்மியூரில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்தான் பலராமலிங்க சுவாமிகள்.

இவர், தன்னை பிரபலப்படுத்திக் கொள்ளாமல் ஒரு வட்டத்துக்குள் தன்னை அடக்கிக்கொண்டு மக்கள் சேவை செய்தார்.

தற்போது சித்தர், மகான்களை தேடும் மக்கள் கூட்டம் பெருகிவரும் இந்நேரத்தில்தான் இந்த சித்த ரைப் பற்றிய தகவல் வெளியே தெரிய ஆரம்பித்து, தற்போது மக்கள் கூட்டம் இவரின் ஜீவசமாதியை நாடி வருகின்றனர்.



இவரது ஜீவ சமாதி திருவான்மியூர் மருந்தீஸ்வரர் ஆலய திருக்குளம் பகுதியில் இருந்து குப்பம் பகுதிக்கு செல்லும் சாலையில் உள்ள எஸ்.ஆர்.நகரில் இருக்கிறது.

எஸ்.ஆர்.நகரில் மிக மிக பழமையான காசி விஸ்வ நாதர் ஆலயம் ஒன்று இருக்கிறது. பல ஆயிரம் ஆண்டுகள் வழிபாட்டில் காசி விஸ்வ நாதர் ஆலயம் இருந்துள்ளதாக பல்வேறு குறிப்புகளும் உள்ளன.

அடர்ந்த வனப்பகுதியில் புதர்களுக்கு







மத்தியில் இந்த ஆலயம் மறைந்திருந்ததாகவும், ஆங்கிலேயர்கள்தான் இதை கண்டுபிடித்து சீரமைத்ததாகவும் சொல்கிறார்கள்.

இந்த ஆலயத்தின் கருவறையில் உள்ள லிங்கம் சுயம்புவாக தோன்றியதாம். காசிக்கு நிகரான வழிபாடுகள் கொஞ்சமும் குறைவின்றி இந்த ஆலயத்தில் நடப்பது குறிப்பிடத்தக்கது.

மிகப்பெரிய ஆலமரத்தின் கீழ் அதன் விழுதுகளால் இந்த ஆலயம் சூழப்பட்டு அமைந்துள்ளது. ஆலமரத்தின் விழுதுகள் கருவறை முழுக்க சுற்றி பின்னி பிணைந்துள்ளன. இதன் மூலம் இதன் பழமை சிறப்பை பார்த்தவுடனேயே உணர்ந்து கொள்ள முடிகிறது.

சிவபெருமான் இந்த ஆலயத்தில் தம்பதி சகிதம் இல்லாமல் தனியாக அமர்ந்திருக்கிறார். அவர் தியான நிலையில் இருப்பதாக சொல்கிறார்கள். அதை பிரதிபலிப்பது போல அந்த ஆலயத்துக்குள் நுழைந்ததுமே மிகப்பெரிய அமைதி இருப்பதை அனுபவப் பூர்வமாக உணர முடிகிறது. இதற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் பலராமலிங்க சுவாமிகள் சித்தர் இந்த ஆலயத்தில் அமர்ந்து மக்களை நல்வழிப்படுத்தி உள்ளார்.

இந்த சித்தரின் பூர்வீகம் அடையாறில் உள்ள நாராயணன் தோட்டம் என்கிறார்கள். அங்கு வசித்த ஒரு மீனவரின் மகனாக இவர் பிறந்தார்.

சிறு வயதிலேயே இவருக்கு ஆன்மிக மலர்ச்சி ஏற்பட்டது. இதனால் சித்தன் போக்கு சிவன் போக்கு என்பார்களே அப்படி தன்னை ஆலய வழிபாட்டிலும், மக்கள் சேவையிலும் ஈடுபடுத்திக் கொண்டார். காதி கிராப்ட் நிறுவனத்தில் சில ஆண்டுகள் இவர் பணிபுரிந்ததாக தெரிய வந்துள்ளது.

பெரும்பாலும் திருவான்மியூரில் உள்ள பாம்பன் சுவாமிகள் ஜீவ சமாதி ஆலயத்துக்கு சென்று மிக நீண்ட தியானத்தில் ஈடுபடுவார்.




இதன் காரணமாக பாம்பன் சுவாமிகளின் அருள் காட்சியை இவர் பெற்றதாக சொல்கிறார்கள். ஆனால் எந்த காலகட்டத்தில் எப்படி இவர் மிக உயர்ந்த சித்த புருஷர் நிலைக்கு சென்றார் என்பது தெரியவில்லை.

இவரது பூர்வீகம் தெரிந்தாலும் மற்ற விவரங்களை சேகரிக்கவில்லை. ஏனெனில் அதை பலராமலிங்க சுவாமிகள் சித்தர் விரும்பியது கிடையாது. எனவே அவர் காட்டிய வழிகளை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் போதும். பலராமலிங்க சுவாமிகள் சித்தர் பல ஆண்டுகள் பாம்பன் சுவாமிகள் ஆலயத்தில் இருந்துள்ளார்.

ஒரு தடவை பாம்பன் சுவாமிகள் அவரை ஆட்கொண்டு சில உத்தரவுகளை பிறப்பித்ததாக தெரிகிறது. அதன் அடிப்படையில்தான் பலராமலிங்க சுவாமிகள் சித்தர் அங்கிருந்து புறப்பட்டு எஸ்.ஆர்.நகரில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கு வந்தார் என்று கூறப்படுகிறது. முதலில் அந்த பகுதி மக்கள் அவரை ஏற்கவில்லை. ஆலய வழிபாட்டுக்கும் அனுமதி மறுத்தனர்.

ஆனாலும், பலராமலிங்க சுவாமிகள் தனது

முடிவில் உறுதியாக இருந்தார். காசி விஸ்வநாதர் ஆலய கருவறை லிங்கத்தை கட்டிப்பிடித்த படி 48 நாட்கள் அப்படியே இருந்தார்.

தியான நிலையிலும், பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தபடியே அவர் இருந்தார். ஒரு நேர உணவு கூட எடுத்துக்கொள்ளாமல் 48 நாட்கள் அவர் லிங்கத்தை கட்டிப்பிடித்தபடி இருந்ததை கண்டதும் அந்த குப்பத்து மக்கள் இவர் மிகப் பெரிய மகான் என்று புரிந்து கொண்டனர்.

அதன்பிறகுதான் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் அவர் தங்கியிருக்கவும், ஆலய சேவை செய்யவும் அனுமதித்தனர். ஆலய வழிபாடு விஷயங்களில் யாருடைய ஒத்துழைப்பு கிடைக்காவிட்டாலும், பலராமலிங்க சுவாமிகள் சித்தர் கவலைப்பட்டதே கிடையாது. அந்த கால கட்டத்தில் காசி விஸ்வநாதர் ஆலயத்தின் எதிரே மிகப்பெரிய குளம் ஒன்று இருந்தது.

அந்த குளத்தில் காலை நீராடி விட்டு புனித நீர் எடுத்துவந்து காசி விஸ்வநாதரை அபிஷேகம் செய்து வழிபடுவதை சித்தர் வழக்கத்தில் வைத்திருந்தார். காசியில் நடப்பது போன்றே அதிகாலையிலேயே பூஜைகள் செய்துவிடுவார். 6 கால பூஜையையும் சிரத்தையாக செய்தார்.

யாரிடமும் பேசவே மாட்டார். எழுதி காட்டுவார். அதன்படி நடக்க சொல்வார். இவரது சிறப்பை நீண்ட நாட்களுக்கு பிறகே அந்த பகுதி மக்கள் உணர்ந்தனர். அதன் பிறகுதான் வாழ்க்கை பிரச்சினை, நோய் போன்றவற்றை தீர்ப்பதற்காக பலராமலிங்க சுவாமிகள் சித்தரை நாடிவர தொடங்கினார்கள். தன்னை தேடி வருபவர்கள் தூரத்தில் வரும் போதே இந்த சித்தருக்கு தெரிந்துவிடும்.

யார் வருகிறார்கள்? எதற்காக வருகிறார்கள்? என்பதை சொல்லி விடுவார். பெரும்பாலும் அவரது பார்வையே அத்தனை தோஷங்களையும் விரட்டும் வல்லமை பெற்றிருந்தது. தன்னை தேடி வருபவர்களுக்கு முதலில் உணவு வழங்குவதை இவர் வழக்கத்தில் வைத்திருந்தார். தன் கைப்பட சமையல் செய்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு உணவு பரிமாறுவார்.

அவர் சமையல் செய்வதே தனி அலாதியாக இருக்கும் என்று சொல்வார்கள் சமையல் அறைக்குள் சென்றுவிட்டால் கதவை பூட்டிக் கொண்டு சமைப்பார். சில நிமிடங்களுக்குள் உணவு வகைகள் தயாராகி விடும். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இது மிகுந்த ஆச்சரியத்தை கொடுக்கும். அவர் கைப்பட்ட சாதம் அவ்வளவு ருசியாக இருக்குமாம்.

தன் கைப்பட அள்ளி அள்ளி உணவை வைத்து




வயிராற சாப்பிடுங்கள் என்று செரல்வாராம். மற்றவர்கள் சாப்பிட்டு கொண்டு இருக்கும்போதே இவர் ஏப்பம் விடுவாராம். மற்றவர்களுக்கு அந்த உணவு மருந்தாக மாறி புத்துணர்ச்சி தந்தது என்கிறார்கள். அந்த அளவுக்கு தனது உணவு மூலம் தினம் தினம் அற்புதங்களை இந்த சித்தர் நிகழ்த்தி காட்டி உள்ளார்.

சில சமயம் உணவு பரிமாறும்போதே இந்த சாம்பார் போன மாதம் வைத்தது என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்வாராம். அந்த சாம்பார் அந்த அளவுக்கு அற்புதமான ருசி கொண்டதாக மாறி இருக்குமாம்.

சில சமையல் பாத்திரங்களில் உணவு நிரம்ப இருக்கும். அந்த பாத்திரங்களை ஒருவரால் நகர்த்த கூட முடியாது என்பார்கள். ஆனால் சித்தர் மிக எளிதாக ஒரு கையால் அதை நகர்த்திகொண்டு வருவதைப் பார்த்து ஆச்சரியப் படுவார்களாம்.

இப்படி அற்புதங்களுக்கு மேல் அற்புதங்கள் செய்த இந்த சித்தர் ஒரு தடவை கூட சாப்பிட்டு எந்த பக்தரும் பார்த்ததே கிடையாது. அதுபோல அதிக நேரம் தூங்கியும் யாரும் பார்த்ததில்லை.

ஆனால் பெரும்பாலும் காசி விஸ்வநாதர் கருவறை அருகே தியானத்தில் ஆழ்ந்து விடுவாராம். இவர் தியானத்தில் இருக்கும் பொழுது 2 மிகப்பெரிய பாம்புகள் இவரை சுற்றி கொண்டு இருப்பதை பலரும் பார்த்திருக்கிறார்கள்.




சில சமயம் இவருடன் பாம்புகள் விளையாடுமாம். அதையும் அந்த பகுதி மக்கள் பார்த்து ஆச்சரியப்பட்டு இருக்கிறார்கள். பாம்புகள் விளையாடி கொண்டிருக்கும் போது யாராவது கோவிலுக்குள் வந்தால் சித்தர் கைவிரலால் சொடுக்கு போடுவாராம்.

அடுத்த நிமிடம் பாம்பு கள் அவர் மீதிருந்து இறங்கி எங்காவது சென்று மறைந்து கொள்ளும் என்கிறார்கள்.

மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்த இந்த சித்த புருஷர் எத்தனையோ பேரின் வாழ்வில் மகத் துவங்களை செய்து காட்டியுள்ளார். இவர் 1993ம் ஆண்டு சித்திரை மாதம், திருவாதிரை நட்சத் திரம், சஷ்டி திதி அன்று பரிபூரணம் அடைந்தார். அவரை காசி விஸ்வநாதர் ஆலயத்தின் கருவறை பகுதியில் ஜீவ சமாதி அமைத்துள்ளனர். அங்கி ருந்து அவர் இன்றும் தனது அருளை வாரி வாரி வழங்கி கொண்டிருக்கிறார்.



கீதா ராஜன்

இப்போதும் கூட அவர் தன்னை நம்பிக்கையுடன் வணங்குபவர்களுக்கு நல்லது செய்து கொண்டு இருக்கிறார். தன்னை நம்பி வந்து வழிபடும் பக்தர்களின் கனவிலும் இவர் சென்று அறிவுரை கூறியுள்ளார்.

சென்னையில் இவரின் ஜீவசமாதி இருந்தாலும், இவரைப் பார்க்க இவரின் அனுமதி உள்ள பக்தர்களால் மட்டுமே முடியும் என்பதால், இவரைப் பற்றி அதிகப்படியாக பெரும்பாலானோர் அறியவில்லை என்று கூறப்படுகிறது.

பலராமலிங்க சுவாமிகள் சித்தரிடம் சீடராக இருந்த ஒருவர் தற்போது பூஜைகள் செய்து வருகிறார்.

மேலும் இவரின் ஜீவசமாதியில் 12 முறை சுற்றி வலம் வந்து இவரை வணங்கினால் இவரின் ஆசி கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

வாய்ப்பு கிடைத்தால் இந்த சித்தரை தரிசித்து பலன் அடையுங்கள்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

**145** க்கும் மேற்பட்ட

இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

www.aanmeegamalar.com

# சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் உள்ள வித்தியாசம்?

சிற்றின்பம் பேரின்பம் என்றால் என்ன என்பது பற்றி ஒரு நிலையான முடிவுக்கு வர முடியாமல் தவிக்கும் மனதிற்கு, இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் ஒருசிலவற்றைப் பற்றி பார்ப்போம்.

**சிற்றின்பம் இது நிலையற்றது பேரின்பம் இது நிலையானது**

● ● ●

படைப்பினால் ஈர்க்கப் பட்டால் சிற்றின்பம்.
படைத்தவனால் ஈர்க்கப் பட்டால் பேரின்பம்.

● ● ●

படைப்புகளை அனுபவித்தால் சிற்றின்பம்.
படைப்புகளை ஆராதித்தால் பேரின்பம்.

● ● ●

படைப்புகளை படைப்புகளாய்
கண்டால் சிற்றின்பம்.
படைப்புகளில் படைத்தவனைக்
கண்டால் பேரின்பம்.

● ● ●

என்னால் தான் இந்த வாழ்க்கை
எனில் சிற்றின்பம்.
இறைவனால் தான் இந்த வாழ்க்கை
எனில் பேரின்பம்.

● ● ●

நான் இந்த உடல்
என எண்ணினால் சிற்றின்பம்.
நான் இந்த உயிர்
என எண்ணினால் பேரின்பம்.

● ● ●

அமைதி ஆனந்தம் சிறிதே பெற்று
பின் இழந்தால் சிற்றின்பம்.
அமைதி ஆனந்தத்தை
நிரந்தரமாகப் பெற்றால் பேரின்பம்.

● ● ●

செய்வதெல்லாம் தனக்காக
என்றால் சிற்றின்பம்.
செய்வதெல்லாம் இறைவனுக்காக
என்றால் பேரின்பம்.

● ● ●

செய்வது நான் என எண்ணினால்
சிற்றின்பம்.
செய்வது இறைவன் என எண்ணினால்
பேரின்பம்.

● ● ●

புறப் பொருட்களில் நிகழ்வில்
சுகமுறுவது சிற்றின்பம்.
அகத்திலேயே நித்திய
சுகம் பெறுவது பேரின்பம்.

● ● ●

இன்பத்தை அடைந்தாலும் மீண்டும்
வேண்டுவது திருப்திஅடையாதது சிற்றின்பம்.
வேறு எதனையும் விரும்பாதது
பூரணமானது பேரின்பம்.

● ● ●

நிரந்தர பேரின்பத்தை மறைப்பது சிற்றின்பம்.
நிலையற்ற சிற்றின்பத்திற்கு
அப்பாற்பட்டது பேரின்பம்.

● ● ●

உடலோடு மனதை தொடர்புப்
படுத்துவது சிற்றின்பம்.
உயிரோடு மனதை இணைப்பது பேரின்பம்.

● ● ●

இன்பம் என்கிற வடிவிலிருக்கும்
துன்பமே சிற்றின்பம்.
துன்பம் போல் அறியப்பட்டு
இன்பமாவது பேரின்பம்.

● ● ●

எங்கோ இருக்கிறான் இறைவன்
எனில் சிற்றின்பம்.
எங்கும் இருக்கிறான் இறைவன்
எனில் பேரின்பம்.

● ● ●

பலவீனம், நோய், துன்பம்,
மரணம் தருவது சிற்றின்பம்.
மரணமிலாப் பெருவாழ்வைத்
தருவது பேரின்பம்.

● ● ●

பயம், சஞ்சலம், சந்தேகம், குற்ற உணர்வு
தருவது சிற்றின்பம்.
பயமறியாதது, ஸ்திரமானது,
தூய்மையானது பேரின்பம்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

• • •

சிறு உணர்ச்சிகளில்
இன்பம் அடைவது சிற்றின்பம்.
எல்லையற்ற பிரம்மத்தில் கலப்பது பேரின்பம்.

• • •

பிறரை தனக்காக பயன்படுத்துவது சிற்றின்பம்.
தன்னை பிறருக்காக அர்ப்பணிப்பது பேரின்பம்.

• • •

அளவுடையது, முடிவுடையது சிற்றின்பம்.
அளவற்றது, முடிவிலாதது பேரின்பம்.

• • •

அறிவை மழுங்கடிப்பது சிற்றின்பம்.
அறிவைப் பிரகாசிக்கச் செய்வது பேரின்பம்.

• • •

அழகை மட்டும் ஆராதித்தால் சிற்றின்பம்.
அழகற்றதும் அழகும் ஒன்றானால் பேரின்பம்.

• • •

பயன் கருதி செயல் புரிந்தால் சிற்றின்பம்.
பயன் கருதாது செயல் புரிந்தால் பேரின்பம்.

• • •

முதலில் இனித்து
பின் கசப்பது சிற்றின்பம்.
முதலில் கசந்து பின் என்றும்
இனிப்பது பேரின்பம்.

• • •

இரக்கமற்றது, ஒழுக்கமற்றது சிற்றின்பம்.
கருணையுடையது, தர்மமானது பேரின்பம்.

• • •

உடலாய் அனைத்தையும் கண்டால் சிற்றின்பம்.
உயிராய் அனைத்தையும் கண்டால் பேரின்பம்.

• • •

புலன்களில் இன்பம் துய்ப்பது சிற்றின்பம்.
புலன்களுக்கு அப்பால் சென்றால் பேரின்பம்.

• • •

மனம் உலகில் அலைந்தால் சிற்றின்பம்.
மனம் இறைவனில் ஒடுங்கினால் பேரின்பம்.

• • •

மரண பயம் ஏற்படுத்துவது சிற்றின்பம்.
மரணத்தையும் வெல்வது பேரின்பம்.

• • •

மனமாய் இருந்தால் சிற்றின்பம்.
மனதைக் கடந்தால் பேரின்பம்.

• • •

வேறு வேறாய்க் கண்டால் சிற்றின்பம்.
எல்லாம் ஒன்றெனக் கண்டால் பேரின்பம்.

• • •

பகுதியாய்க் கண்டால் சிற்றின்பம்.
மொத்தமாய் கண்டால் பேரின்பம்.

• • •

அகங்காரம் கொண்டால் சிற்றின்பம்.
அகங்காரம் துறந்தால் பேரின்பம்.

• • •

தசையில் சுகம் பெறுவது சிற்றின்பம்.
அன்பில் தன்னை இழப்பது பேரின்பம்.

• • •

ஆண் பெண்ணில் இன்புறுவது சிற்றின்பம்.
ஆண் பெண்ணை வணங்குவது பேரின்பம்.

• • •

துய்க்கும் நேரத்தில் மட்டும்
இருப்பது சிற்றின்பம்.
துய்த்து விட்டால் நீங்காதது பேரின்பம்.

• • •

ஜீவராசிகளால் தர முடிந்தது சிற்றின்பம்.
இறைவனால் தரப்படுவது பேரின்பம்.

• • •

உலகைப் பற்றினால் சிற்றின்பம்.
இறைவனைப் பற்றினால் பேரின்பம்.

• • •

பிறர் நலனைக் காணாதது சிற்றின்பம்.
தன் நலம் கொள்ளாதது பேரின்பம்.

• • •

இன்பம் இல்லாத இன்பம் சிற்றின்பம்.
இன்பமான இன்பமே பேரின்பம்.

• • •

அஞ்ஞானம் விரும்புவது சிற்றின்பம்.
ஞானம் விரும்புவது பேரின்பம்.

• • •

பெற்று மகிழ்வது சிற்றின்பம்.
கொடுத்து மகிழ்வது பேரின்பம்.

• • •

சக்தியை இழப்பது சிற்றின்பம்.
சக்தியாய் மாறுவது பேரின்பம்.

• • •

பற்றுக் கொள்வது சிற்றின்பம்.
பற்றற்று இருப்பது பேரின்பம்.

• • •

மாறுவது, தாவுவது சிற்றின்பம்.
மாறாதது நிலைத்தது பேரின்பம்.

• • •

நிலையற்றது சிற்றின்பம்.
நிரந்தரமானது பேரின்பம்.

• • •

# மூன்றுநிலை






www.aanmeegamalar.com

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும், நாம் செய்யக் கூடிய ஒவ்வொரு கர்மாவும், மூன்று நிலை அடைகிறது. சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தம். இப்போது நமக்கு இந்த பிறவி கிடைத்த உள்ளது.

இதில் சில வியாதிகளும், சில சுகங்களும், துன்பங்களும் கிடைக்கின்றன. இப்போது நாம் இந்த சரீரத்தின் மூலம் அனுபவிக்கும் சுக, துக்கங்களுக்கு ப்ராரப் தம் என்ற கர்மா காரணமா கிறது.

இப்போது இந்த சரீரத்தின் மூலம் செய்யக்கூடிய நல்வினை, தீவினைகள், வரும் காலத்தில் பலன் அளிக்கக் கூடியது மாக, ஆகாமிய என்ற பெயரோடு வருகிறது. இப்படி ஒருபிறவியல்ல ஆகாமிய கார்யங்கள் பல செய்துவிடுகிறோம். இதற்கு பலன் உண்டு. இப்படி ஆகாமிய காரியங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அமைந்து விடுகிறது.

இப்படிசேர்ந்த கர்மாக்களுக்கு சஞ்சிதம் என்று பெயர் இப்படி சஞ்சிதத்திலிருந்து ஒரு பிறவியில் நாம் அனுபவிக்கும் சுக, துக்கங்களுக்கு, பிராரப் தம் என்று பெயர் சொல்லுகிறோம். பிராரப்தம் என்று இப்பிறவியில் பல, இன்ப, துன்பங்களை அனுபவிக்கிறோம்.

இது முற்பிறவிகள் ஒன்றில் செய்த பாவ, புண்ணியங்களுக்கு இப்போது பலனளிக்கிறது. முன்பு செய்த நல்வினை, தீவினை தொடர்ந்து பல பிறவிகளில் சுக. துக்கங்களைக் கொடுக்கிறது.

இந்த பிறவியில் அனுபவிக்கிற சுக, துக்கங் களுக்கு மறுபிறவிகளில் செய்த நல்வினை, தீவினையே தவிர இப்பிறவியில் செய்ததற்கு அல்ல.

இதனால் ஆகாமிய கர்மா புதிது, புதிதாக நிறைய பல பிறவிகளில் ஏற்படுகிறது. இப்படி ஒவ்வொரு பிறவியிலும் பலவிதமான நல்வினை தீவினைகள் நிறைய சேர்ந்தாலும், அதே வரிசைப் படி தொடர்ந்து அடுத்த பிறவியில் பலன் தராது.

உதாரணமாக பொருள்களை வாங்குவதற்கு ரேஷன் கார்டுகள் கொடுக்கிறார்கள். அந்த ரேஷன் கார்டில் ஒரு வரிசை எண் தரப்பட்டிருக் கிறது. அதில் எத்தனை நபர் என்று குறிக்கப் பட்டிருக்கிறது.

எப்போது ரேஷன் கார்டு வழங்கப்பட்டது என்ற விபரமும் இருக்கும். இத்தனையும் இந்த ரேஷன் கார்டில் இருந்தாலும் ரேஷன் வாங்க செல்பவர்கள், குறிப்பிட்ட வரிசை எண் பிரகாரம் செல்லமாட்டார்கள். யாருக்கு எப்போது

தேவையோ அதற்கு ஏற்றாற்போல் செல்வார்கள்.

அதுபோல நம் முன்வினைகள் என்பதற்கு முற்பிறவியில் என்றோ, முன் செய்த வினை என்றோ இரண்டும் அர்த்தமல்ல, ஏதோ ஒரு பிறவியில் ஏதோ ஒன்று செய்து இருக்கிறோம்.

அதற்கேற்றபடி அடுத்த பிறவி வருகிறது. அந்த ரேஷன் கார்டில் இத்தனை நபர்கள் என்று எழுதப்பட்டு இருக்கிறது, அதற்கு ஏற்றவாறு பொருள்களை வழங்குகிறார்கள். கூடுதலாக வழங்க மாட்டார்கள். குறைந்த பொருளைப் பெற இரண்டு வழிகள் உண்டு.

பொருள்கள் குறைந்த இருந்தாலும், குறைந்து கொடுத்து விடுவார்கள். நம்மிடையே பணம் குறைவாக இருந்தாலும் குறிப்பிட்ட பொருளை குறைத்து வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு, அதுபோல் நமக்கு இந்த பிறவியில் கூடுத லாக வர வாய்ப்பு கிடையாது. நாம் இந்த பிறவி யில் எவ்வளவு அனுபவிக்க வேண்டுமோ அவ்வளவு தான் வர வாய்ப்பு உண்டு. சுக துக்கங்கள் குறைத்துக்கொள்ள வாய்ப்பு உண்டு, கடவுள் பக்தி, பெரியோர் ஆசிகள் மூலமாக.

உதாரணமாக பெரிய மழை வருகிறது, மழை யை நிறுத்த முடியாது, நாமும் வெளியில் செல்ல வேண்டும், மழையிலும் நனையக் கூடாது. இப்படி மழையைத் தடுக்க நாம் என்ன செய்வோம்? உடல் பூராவும் மறைத்து மழைக் கோட்டு அணிந்து கொள்ளுவோம்.

அப்போது மழை நம்மீது பெய்யும், மழைக் கோட்டு முழுவதும் நனையும். நாம் நனைய மாட்டோம். எப்படி மழையில் நனைந்தாலும், மழைக்கோட்டு நம்மை காக்கிறதோ, அதுபோல நம் சுக துக்கங்களை குறைத்து காக்கும்.

ரேஷன் கார்டில் சாமான்கள் பெற்றுக்கொண்ட தற்கு குறியிட்டு விடுவார்கள். ஆனால் அதே கார்டை வைத்துக்கொண்டு அடுத்தவாரம் செல்ல லாம். அது புதிதாக பொருள் வாங்க உதவுமே தவிர, பழைய சாமான்களுக்கு பயன்படாது. ஏனெனில் ரேஷன் கார்டில் சாமான்கள் பெற்றுக் கொண்டதற்கு குறியிட்டு விடுவார்கள். ஆனால் அதே கார்டை வைத்துக்கொண்டு அடுத்த வாரம் செல்லலாம். அது புதிதாக பொருள் வாங்க உதவுமே தவிர, பழைய சாமான்களுக்கு பயன்படாது.

ஏனெனில் ரேஷன் கார்டில் பெறப்பட்ட பொருள் குறிக்கப்பட்டு விடுவதால், அது போல நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் வினைகளும், முன்னாடி அனுபவித்த நல்வினை, புதியதை அனுபவிக்க அனுபவிக்க பழையவை தீர்ந்து விடுகின்றன. புதியவை செய்ய அது சேரும்.




ஆகவே பழையவினை அனுபவிப்பதால் அது அழிந்துவிடும் ஆகவே சுக, துக்கங்களை அனுபவிக்கிறோம் என்றால் பழைய வினைகள் அழிந்து கொண்டு வருகின்றன என்று அர்த்தம்.

இந்த ரேஷன் கார்டின் விதி ஒரு பொது விதி, சில சமயம் விசேஷ கோட்டாவில் பொருள்கள் வழங்கப்படும். அப்போது பொருட்கள் கூடுதலாக கிடைக்கும். இதே பேலத்தான் அதிக புண்யமோ, பாவமோ, மனிதன் வாழ்க்கையில் அதிக துக்க மோ, நன்மையோ ஏற்பட்டு விடுகின்றன, ஒரு சமயத்தில் பொருட்கள் நிறைந்த விட்டால் ரேஷன் கார்டு தேவையில்லாத நிலை ஏற்படுகிறது.

அதுபோலப் பகவான் அருள் பரிபூரணமாக நிறைந்து விட்டால் இந்த நல்வினை, தீவினைப் பயன்கள் அடிபட்டு விடுகின்றன. ஞானமும், ஆனந்தமும் கிட்டிவிடுகிறது.

இப்படியாக ஒரே வினை மூன்று நிலைகள் அடைந்து கடைசியில் ஒரு மனிதப் பிறவியில், பிறவியல்லாத நிலை அடைவதற்கு காரணமாக ஆகிறது.

## கிரகணம் எப்படி உண்டாகிறது?

# கிரகண நாட்களில் நோன்பு, தியானம் செய்வது ஏன்?

சூரியன் வேகமாக சுற்றிக் கொண்டிருக்கிறது. அப்போது heavier elements எல்லாம் நடு மையத்திற்கு சென்றுவிடும் என்று ஓரளவுக்கு எல்லோருக்கும் தெரியும். Particle movement குறைந்தால்தான் ஒன்றோடு ஒன்று நெருங்கி இணைய முடியும்; heavier element ஆக மாறும்.

அப்படி வரும்போது ஒரு குறிப்பிட்ட இடம் வந்தது என்றால் அதற்கு மேலே அசைய முடியாமல் அந்த சுழல் வேகமே நின்று போகிறது. சுழல் வேகமே நின்று போனால் "கரு அணு" என்று சொல்லக் கூடிய Nucleus-க்கு இயக்கமே இல்லை. Nucleus நின்று போய்விட்டால் உடனே அதை சுற்றி வந்து கொண்டே இருக்கும் electron, proton எல்லாம் ஓட ஆரம்பிக்கும். ஓட ஆரம்பித்தால் அதுதான் அணுச்சிதைவு.

அந்த அணுச்சிதைவு ஏற்பட்ட உடனே கரு அணு நின்று போய், அதே போல பக்கத்தில் ஒன்று நின்று போய், இதே மாதிரி கோடான கோடி அணுக்கள் அழிந்தன. அங்கு இருந்த கரு அணு எல் லாம் வெட்ட வெளியாக, அந்த வெட்ட வெளியை "Black-spot in the Sun" என்று சொல்கிறோம். அதாவது சூரியனில் கரும்புள்ளி என்று தோன்றும் வெட்டவெளி.

சூரியனுடைய இயக்கத்தில் வெட்டவெளி நிற்க முடியாது. அதனால் மையத்தில் ஏற்பட்டபோதும் இரண்டு பக்கமும் பீறிட்டுக்கொண்டு வெளியே வந்து பிரபஞ்சமெல்லாம் கடந்து, கோடு போல சென்று சுத்த வெளியோடு கலந்து விடுகிறது. அதனால்தான் அந்த கிரகங்களை எல்லாம் spiritual கிரகங்கள், ஆன்மீக கிரகங்கள் என்று சொல்வது.

ராகுகேது என்றால் இப்போது விஞ் ஞானிகள் சொல்கிறார்களே Black-hole அதுதான் ராகுகேது. சூரிய னின் நடுமையத்திலிருந்து உற் பத்தி ஆகக்கூடிய அந்த Black-hole இரண்டு பக்கமும் பீறிட்டுக்கொண்டு வந்து எப்போதும் அதை கடந்து கொண்டே இருக்கிறது.

அதற்கு நேராக சந்தி ரன், பூமி, சூரியன் இது மூன்றும்வரும்போது அந்த மறைவு சரியாக வந்து விடும்.

ஒவ்வொரு மாதமும்மூன் றும் ஒன்றாகத்தான் வருகின் றன; கிரகணம்வருவது இல்லை. ராகுகேது என்ற அந்த Black-hole நேரில் வருகின்றபோதுதான் அந்த மறைவு உண்டாகிறது. உடனே

www.aanmeegamalar.com





"கிரகணம்" என்று சொல்கிறோம். சூரியனை மறைக்கும்போது நேரடியாக அந்த இடத்தில ராகுவோ கேதுவோ அந்த ஓட்டம் இருக்குமானால், அதன் பெயர் "சூரிய கிரகணம்"; அல்லது பூமி வந்து சந்திரனுடைய ஒளியை மறைக்குமேயானால் அது "சூரிய கிரகணம்".

சந்திரனை பூமி மறைக்கும் போது, அதாவது பூரண சந்திரன் தினத்தில் நடு மையத்தில்பூமி நிற்கும்; அதனால் பூமி சூரியனிலிருந்து வரக் கூடிய வெளிச்சத்தை மறைத்துவிடும்.

அந்தமறைவு சந்திரன் மேல் படுகின்றது. அது தான் "சந்திர கிரகணம்". அதுவும் ராகுகேது என்ற Black-holeக்கு நேரில் வந்தால்தான் அந்த மறைவு தெரியுமே தவிர மற்றபடி மறைப்பது இல்லை. ஆகையினால் ஒவ்வொரு மாதமும் ராகு பிடித்து விட்டது, இது ஒரு பாம்பு என்று சொல்வார்கள். நீளமாக வருவது எல்லாம் பாம்பு என்று சொல்லிக்கொள்வது நமது வழக்கம்.

இதனால் சூரிய ஒளி, சந்திர ஒளி பாதிக்கப்படும்போது நம் உடலில் உள்ள ரசாயனம் magnetic force வித்தியாசப்படும். அந்த மாறுதல் ஏற்படும்போது நமது உணவு செரிமானமாகின்ற முறை குறைவாக இருக்கிறது. அந்த நேரத்தில் தெய்வீக நினைவு அல்லது வேறு எதாவது சங்கற்பம் செய்வது நல்லதே. அப்படி இல்லாமல் இஷ்டம்போல் சுற்றும்போது உடல் உறவு கொள்ள நேரிடும். அந்த நேரத்தில் விளையக் கூடியகுழந்தை கேடுற்ற உடலும் மனமும் உடையதாகஇருக்க கூடும் என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாம். ஆகவே, இத்தகு விபத்துக்களை தடுப்பதற்காகவே அந்த நாட்களை விரத நாட்களாக ஆக்கி வைத்திருக்கின்றனர்.

கிரகண நேரத்தில் சாப்பிடாமல் இருப்பதுநல்லது. இதனால் உடலினுடைய சக்தி அழிவு இல்லாமல் immunity அப்படியே காப்பாற்றப்படும்.

கிரகணம் முடிந்து குளிப்பது என்பது எப்பொழுதும் குளிப்பது போல்தான். அப்பொழுது குளிக்காமல் போனால் ஒன்றும் இல்லை. தூய்மை வேண்டும் என்று எடுக்கும்போது எதற்குமே குளித்துவிட்டு செய்வது ஒரு சடங்குதான்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

www.aanmeegamalar.com

# தோப்புகரணம் போட்டால் எண்ணியது நிறைவேறுமா?

## சதுர்த்தி திதியும் விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவமும்

தும்பிக்கை கடவுள் விநாயகர் பிறந்த திதியை சதுர்த்தி திதி என்று கூறுவார்கள், வருடத் திற்கு ஒருமுறை வரும் மகா சதுர்த்தியைப் போன்று, மாதம் தோறும் வரும் சதுர்த்தி திதி அன்றும் விநாயகர் வழிபாட்டிற்கு உகந்த நாளாகும்.



www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மீகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் அமாவாசை மற்றும் பௌர்ணமிக்கு அடுத்து வரும் நான்காவது நாள் சதுர்த்தி திதியாகும். இந்த சதுர்த்தி திதியில் விநாயகரை வழிபட்டு வருபவர்களுக்கு வேண்டிய வரம் கிடைக்கும் என்பது ஐதீகமாக இருந்து வருகிறது. அதில் முக்கியமாக ஆவணி மாதம் வரக்கூடிய வளர்பிறை சதுர்த்தி திதி ரொம்பவே முக்கியமானது.

அன்றைய தினத்தில் தான் நம்மு டைய தும்பிக்கை கடவுள் விநாயகர் பிறந் திருக்கிறார். இந்த விநாயகர் சதுர்த்தியில் தவறவிடாமல் கடைபிடிக்க வேண்டிய 5 முக்கியமான விஷயங்கள் என்னென்ன? என்பதை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

விநாயகர் பெருமானை வழிபடுவது ரொம்பவும் சுலபம். மஞ்சள், சாணம்போன்ற வற்றைக் கொண்டு பிடித்து வைத்தால் பிள்ளையார் அதில் ஆவா ஹனம் ஆகிவிடு கிறார். முழு முதல் கடவுளாக வழிபடப்படும் இந்த விநாயகர் பெருமான் அருள் செய்வதில் வள்ளலாக விளங்குகிறார். மனதார விநாயகப் பெருமானை நினைத்து வழிபட்டாலே, அவர் வேண்டியதை நிறைவேற்றி விடுகிறார்.

அவருக்கு பிடித்தமான பொருட்களை நைவேத்தியம் படைத்து விநாயகர் சதுர்த்தி

அன்று வழிபடுபவர்களுக்கு துன்பங் களும், துயரங்களும் உடனே நீங்கி விடுவதாக பக்தர் களால் நம்பப்பட்டு வருகிறது.

அரச மரம், ஆலமரம், வன்னி மரம் ஆகிய மரங்களுக்கு அடியில் இருக்கும் விநாயக ருக்கு தனி சிறப்புகள் உண்டு. மேலும் எருக்கம் பூ மற்றும் அருகம்புல் ஆகியவை விநாயகருக்கு மாலையாக சூட்ட வேண்டிய பொருட்களாகவும் இருக்கிறது. இவற்றை கட்டாயம் விநாயகர் சதுர்த்தியில் படைப்பது ரொம்பவே விசேஷமானது.



எருக்கம் பூ மாலை சாற்றி, அருகம்புல் கட்டு ஒன்றை அவருடைய காலடியில் வைக்க வேண்டும். அரசமரம், ஆலமரம், வன்னி மரத் தின் உடைய இலைகள் கிடைத்தால் அதையும் விநாயகருடைய பாதத்தில் வைத்து வழிபட்டால் நன்மைகள் நடக்கும்.

விநாயகர் சதுர்த்திக்கு தவறாமல் வைக்க வேண்டிய நைவேத்திய பொருட்கள் சுண்டல், பிடி கொழுக்கட்டை, மோதகம், அப்பம், அரிசி பொரி, அவல் பொரி, சர்க்கரை பொங்கல் ஆகிய வை ஆகும். இந்த நைவைத்திய பொருட்கள் படைத்து வழிபடும் பொழுது விநாயகர் மிகுந்த மகிழ்ச்சியுடன் இவற்றை ஏற்றுக் கொண்டு நமக்கு அருள் பாலிப்பார் என்பது நியதி.

எண்ணிய காரியம் எண்ணியபடி நடக்க, விநாயகருக்கு தோப்புக்கரணம் போடுவது வழக்கம். வலது கையால் இடது காதையும், இடது கையால் வலது காதையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழ வேண்டும்.

நீங்கள் காதை பிடிக்கும் பொழுது உங்க ளுடைய கட்டைவிரல் வெளிப்புறமாகவும் மற்ற விரல்கள் உட்புறமாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு செய்யப்படுவதால் உடலில் இருக்கும் குண்டலினி சக்தி தூண்டிவிடப்படுவதாக கூறப்படுகிறது.

இதனால் நம் மனதில் இருக்கும் எண்ணங்கள் நிறைவேறும் என்பது நம்பிக்கை. எனவே விநாயகர் சதுர்த்தி அன்று தோப்புக்கரணம் போட மறக்காதீர்கள். உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தோப்புக் கரணத்தை விநாயகர் முன்பு போடுங்கள்.

அதே போல விநாயகர் சதுர்த்தி அன்று தோப்புக்கரணம் போட்டு முடித்த பின்பு வலது புறம் மூன்று முறை உங்களை நீங்களே சுற்றிக் கொள்ள வேண்டும்.

இது இந்த உலகில் நமக்கு நாமே அனைத்து மாக இருக்கிறோம் என்பதை உணர்த்துகிறது. இவ்வுலகம் தன்னை தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுவது போல, நம்மை நாமே பாதுகாத்துக் கொண்டு, மற்றவர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தும் விதமாக சதுர்த்தி அன்று விநாயக பெருமான் முன்பு இவ்வாறு செய்ய வேண்டும்.

அதேப் போன்று விநாயகர் சதுர்த்தி துவங்கி அடுத்த மூன்று நாட்களுக்கு விநாயகரை கண்டிப்பாக வழிபட வேண்டும். அவர் அவரின் குடும்ப வழக்கத்திற்கு ஏற்ப நாட்களின் எண்ணிக்கை கூடவோ, குறையவோ இருக்கும்.

ஆனால் மூன்று நாட்கள் தொடர்ந்து விநாயகருக்கு தீபத்தை காண்பித்து, மோதகம் படைத்து வழிபட்டு வந்தால் பரிபூரண அருள் விநாயகரிடம் இருந்து நமக்கு கிடைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்

# நொய்டாவில் கந்தசஷ்டி விழா கோலாகலம்








நொய்டாவின் செக்டார் 62 வேதப் பிரச்சார் சன்ஸ்தான் (VPS), ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோயிலில், மகா கந்த சஷ்டி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

ஆறு நாட்களும், காலையில் ஸ்ரீ கார்த்தி கேயருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. கோவில் நிர்வாகத்தால், 'ஸ்ரீ கார்த்திகேய லட்சார்ச்சனை' மற்றும் 'ஸ்ரீ சுப்பிரமணியர் ஹோமம்', 'சர்வ சாந்திக்காக' ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது, இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

கந்த சஷ்டி நாளில், காவடி மற்றும் பால்குடம், ஒவ்வொரு ஆண்டும் பக்தர்களால் எடுத்துச் செல்லப்பட்டு, கோவில் வளாகத்திற்குள் சுற்றி வந்தது.

பிரம்மஸ்ரீ சங்கர் வாத்தியார் மற்றும் அவரது குழுவினர் 'வள்ளி கல்யாணம்' நிகழ்ச்சி நடத்தினர். மேலும், மகா கந்த சஷ்டி விழாவின் போது, ஸ்ரீ மணிகண்டன் சர்மா மேற்பார்வையில், விக்னேஷ், கணபதி மற்றும் மோஹித் மிஸ்ரா ஆகியோர் இறைவனுக்கு அபிஷேகம் செய்தனர்.

ராமகிருஷ்ணாபுரம் சவுத் இந்தியன் சொசைட்டி, புது தில்லி மற்றும் VPS இணைந்து கர்நாடக இசைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தது. ஸ்ரீஹரி மற்றும் ஸ்ரீராக் வழங்கினர். மீனா வெங்கி அவர்கள் கந்த சஷ்டி பற்றிய கருத்துக்களை விரிவாக கூறினார். நொய்டாவின் பல்வேறு துறைகளில் இருந்து மட்டுமின்றி, டெல்லியின் அண்டை பகுதிகள் மற்றும் பிற இடங்களிலிருந்தும் ஏராளமான இசை ஆர்வலர்கள் வந்திருந்தனர். கந்த சஷ்டி விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.


எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




e-magazine மின்னிதழ்

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# 2022 நவம்பர்

(1–11–22 முதல் 15–11–22 வரை)

## மேஷம் முதல் மீனம் வரை

# 12 ராசிகளுக்கான பலன்கள்

குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 25–30% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும். ராசி, லக்கினம் இரண்டில் எது வலுவாக உள்ளதோ அதை பொறுத்தே பலன்கள் அமையும். பலன்களை ராசிப்படியும், லக்கினத்தையும் ராசியாக பாவித்தும் ஒப்பிட்டுப்பார்த்து நடைமுறையில் பொருந்தும் பலன்களை அறிந்து கொள்ளவும்.




ஜோதிட ஆலோசனைக்கு:
ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர், கிருஷ்ணகிரி.
**கி.கார்த்திகேயன்.**
செல்: 7010909413.


## மேஷம்:



பூர்வீக சொத்து சம்பந்தப் பட்ட விவகாரங்கள் உங்க ளுக்கு சாதகமாக அமையும். உங்கள் பங்கு எதிர்பாராத விதமாக கிடைக்கும். எதிரிகள் தொல்லைகள் குறையும். பிள்ளை களின் படிப்பு சம்பந்தப்பட்ட பயணங்கள் இருக் கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம்உண்டு. பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் திருமணம், பிள்ளை பிறப்பு போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும், தாய்மாமன்வகை யில் உறவு வலுப்பெறும். துணைவரின் அன்பும் ஆதரவும் உண்டாகும். மனைவி வேலைக்கு முயற்சி செய்பவரானால் உரிய வேலை கிடைக் கும். தைரியம், உற்சாகம் கூடும். வண்டி, வாகன, வீடு வகையில் செலவுகள் இருக்கும். சீருடை பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆதாயம் காண்பார்கள். தாய்மாமன் முறையில் சிலருக்கு அனுகூலமற்ற அப செய்திகள் கேள்விப்படுவீர் கள். துணைவழி சகோதரர்கள் போலீஸ், ராணு வம் அல்லது தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கப்பெறுவார்கள்.சிலர் நீர்நிலைகள் உள்ள பகுதிகளில் வீடு, நிலம் வாங்குவார்கள். வீட்டில் உள்ள முதியோர் கவனமாக இருக்க வேண்டும். கை, கால் போன்ற பகுதிகளில் தொந்தரவுகள் ஏற்படலாம். வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் அடைவார்கள். அரசியல்வாதிகள் புதிய பதவி களை அடைவார்கள். அரசு துறைகளை சார்ந்த பணியாளர்கள், அதிகாரிகள் பதவி உயர்வு கிடைக் கப்பெறுவர். நீண்டகால முதலீடுகள் செய்வீர்கள். சிலருக்கு சளி, காய்ச்சல் போன்ற தொல்லைகள் வந்து போகும். பெரியோர் தரிசனம், சித்தர்கள் தரிசனம் உண்டாகும். புதிய காரியங்களை தொடங்க 7, 8 தேதிகள் நலமளிக்கும். 5, 6 தேதி களில் குழப்பமான நிலை நீடிக்குமாதலால் அந்த நாட்களை தவிர்ப்பது நல்லது.

## ரிஷபம்:



குடும்பம், நிதி நிலைமை சீராக இருக்கும். பேச்சில் இனிமை கூடும். தொழில், வியாபாரம் சராசரியாக இருக் கும். சுப காரியங்கள், குடும்ப தேவைகளுக்காக நீண்டகால கடன்கள் உண்டாகும். குடும்பத்தில் மனமகிழ்ச்சி உண்டாகும். குழந்தைகள் படிப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களில் சிறந்து விளங்குவார்கள். பிள்ளை களின் தேவைகளுக்கான செலவுகள் உண்டாகும். ஆசிரியர்களை மதித்து நடக்கவேண்டும் இல்லை யெனில் அவப்பெயர் ஏற்படும். கோயில், குளம் போன்ற புனித யாத்திரை செலவுகள் உண்டாகும். இயந்திரப் பணியாளர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் பொறுமையாகவும், நிதானமாகவும் பணியாற்ற வேண்டியது அவசியம். சிலருக்கு

தந்தையாருடன் அல்லது தந்தை ஸ்தானத்தில் உள்ளவர்களுடன் கருத்து வேறுபாடுகள்ஏற்படும். பொன், பொருள், நவநாகரீக பொருட்களின் சேர்க்கை உண்டு. உஷ்ண சம்பந்தப்பட்ட உடல் உபாதைகள் வந்து போகும். தூக்கம் குறையும். வழக்கு, வியாஜ்ஜியங்கள் அனுகூல மாக முடியும். ஆதாயம் பெறுவீர்கள். தொழிலாளர்கள், பணியாளர்கள் சராசரியாக இருக்கும். கிடைக்க வேண்டிய பதவி, ஊதியஉயர்வுகள் தாமதமாகலாம். வியாபாரிகள் நிலை சுமாராக இருக்கும். அதிக அளவிலான கடன்விற்பனைகளை தவிர்க்கவும். தாயாரால் உதவிகள் கிடைக்கும். அரசுத்துறை சார்ந்த பணியாளர்கள் சக பணியாளர்களின் உதவிகள் கிடைக்கப்பெறுவார்கள். அரசியல் வாதிகள் அனாவசிய பிரச்சனைகளில் சிக்குவார் கள். துணையின் வழி சம்பந்தப்பட்ட உறவு வகையில் தேவையான நேரத்தில் பண, பொருள் உதவிகள் கிடைக்கும். மூத்த சகோதர வகையில் வரவு, செலவு இரண்டும் உண்டு. தட்சணாமூர்த்தி மற்றும் ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையளிக்கும். 4, 5 தேதிகள் புதிய முயற்சிகளுக்கு உகந்தவை. 7, 8 தேதிகளில் புதிய திட்டங்களை தவிர்க்கவும்.

## மிதுனம்:



புதிய விஷயங்களை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆன்மீகம், சாஸ்திரம் குறித்த புத்த கங்களை படிக்கும் வாய்ப்பு உண்டாகும்.குடும்ப, தொழில் நிலைமை சீராக சென்று கொண்டிருக்கும். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் நீடிக்கும். ஹோட்டல் கடை, கெமிக்கல், மருத்துவ, வங்கி துறையை சேர்ந்த வர்கள் ஆதாயம், நன்மை அடைவர். துணைவரின் உறவினர் வகையில் திருமணம், கிருஹப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சி, சுப செலவுகள் உண்டாகும். ரசாயன பொருட்களை கையாள்வோர் கவனமாக இருக்க வேண்டும். தொழில், வியாபார, பணி வகையில் பயணங்கள் சிலருக்கு உண்டாகும். வியாபாரிகள், முதலாளிகள் வியாபார விஸ்தீர ணம், புதிய இயந்திரம் கொள்முதல் போன்ற முதலீடுகளை செய்வார்கள். மாணவர்கள் படிப்பு நிலை 50/50 என்ற வகையில் கலவையாக இருக் கும். ஒழுக்கமாக இருந்து நற்பெயரை பாதுகாக்க வேண்டும். ஆரோக்கியம் சீராக இருக்கும். வாயு பித்த சம்பந்தமான தொந்தரவுகள் வந்து போகும். நீண்டகால கடன்கள் அடையும் வாய்ப்பு கூடி வரும். தந்தை வழியில் பொருள் சேர்க்கை, பிள்ளைகளுக்கு உதவி உண்டாகும். மூத்த சகோதரியின் மூலம் உதவி, நன்மைகள் நடக்கும். அம்மன், குலதெய்வ வழிபாடு உண்டாகும். பணி யாளர்கள், தொழிலாளர்கள் நிலை சற்று சிரமமாக செல்லும். எதிர்பார்ப்பு தாமதமாகும். ஆசைகள் ஈடேறுவதில் தடை உண்டாகும்.. புதிய கடன்கள் உண்டாகலாம். அரசு, கான்ட்ராக்ட் தொழில் செய்வோர் சில இடைஞ்சல்களை சந்திப்பார்கள். தடை தாமதங்கள் நீடிக்கும். தந்தையின் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டும். 5, 6 தேதிகளில் புதிய முயற்சிகளுக்கு உகந்தது. 12, 13 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

## கடகம்:



நிலம், மனை, வீடு வாகன சேர்க்கை உண்டாகும். நீர் நிலைகளுக்கு அருகாமையில் முதலீடுகள் செய்வீர்கள். தாயாரின் நீண்டகால ஆசை களை நிறைவேற்றுவீர்கள். பெரியோர், ஆன்மீக புருஷர்களின் சந்திப்பு, அனுக்கிரகம் கிடைக்கப்பெறுவீர்கள். தெய்வீக வழிபாடுகளில் நாட்டம் பிறக்கும். புது தெம்பு, உற்சாகம் பெற்று விளங்குவீர்கள். தொழில், பணி சிறப்பாக செல்லும். நீண்டகால கடன்கள் வசூலாகும். சகோதர உறவுகளுடன் சிறு சல சலப்பு சங்கடங்கள் உருவாகலாம். தொழில், வியா பார வகையில் ஆதாயம், அனுகூலம் உண்டு. துணையின் வழியில் சுப செலவுகள் உண்டாகும். தேவையற்ற அனாவசிய பயணங்கள் அதன் மூலம் பண மற்றும் கால விரயம் சிலருக்கு உண்டாகலாம். நன்கு யோசித்து பயணங்களை மேற்கொள்ளவும். தகவல் பரிமாற்றம் செய்யும் போது கவனமாக இருத்தல் நன்று. சுய திருப்திக்காகவும் மன நிம்மதிக்காகவும் சில செலவுகளை விரும்பி செய்து மகிழ்வீர்கள். குழந்தைகளின் எதிர்கால தேவைகளுக்காக சில துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள். திடீர் டென்சன், படபடப்புசில ருக்கு உண்டாகும். ஆரோக்கியம் மற்றும் நலன்கருதி பொறுமையாக இருக்க வேண்டும். சுப்பிரமணியர் வழிபாடு தேவையற்ற பதட்டம், டென்ஷனைகுறைக்க உதவும். வயிறு, அடிவயிற்று பகுதிகளின் சிலருக்கு உடல் உபாதை கள் தோன்றலாம். சிலருக்கு குடும்பத்தை விட்டு தற்காலிக பிரிவு ஏதேனும் காரணங்களால் உண்டாகும். பணியாளர்கள் வேலையில் சில சவால்களை சந்தித்து வெற்றி பெறுவர். நீண்ட கால ஆசைகளுக்காக செலவுகள் உண்டு. 6, 7 தேதிகள் புதிய முயற்சிகளுக்கு உகந்தவை.. 2,3 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

## சிம்மம்:

திட்டமிட்ட வேலைகளை நினைத்த நேரத்தில்



முடிப்பதில் இடைஞ்சல்கள் உருவாகும். செல்வாக்கு ஓங்கும். தனவரவு இருந்த போதிலும் போன இடம் தெரியாதஅளவிற்கு செலவுகளும்இருக்கும். தந்தையாருடன் கருத்து வித்தியாசம், வேறுபாடுகள் எழலாம். புத்திசாலித்தனமாக சமாளிப்பீர்கள். தந்தைக்காக சில செலவுகள்செய்வீர்கள். தொழில், அலுவல் முறை பயணங்கள், அலைச்சல் உண்டு. தாயார் வழியில் சுக, சௌகரிய தேவைகளுக்கான உதவிகள்கிடைக்கும். பொன், பொருள் உதவிகள் எதிர் பாராத வகையில் கிடைக்கப்பெறுவீர்கள்.தாயாருக்கு திடீர் தன வரவு உண்டு. வீட்டில் வேலை தேடிக்கொண்டிருக்கும் பிள்ளைகள் இருந்தால் உரிய, விரும்பிய பணிகளில் சேர்வர். காவல், ராணுவம், சீருடை பணி மற்றும் போட்டி தேர்வு எழுதிவிட்டு முடிவுகளுக்காக காத்திருப்போருக்கு எதிர்பார்க்கும் நல்ல முடிவு வரும். பயணங்களில் நிதானம், பொறுமையை கடைபிடிக்கவும். தாய் மாமன் வழியில்உதவிகள் உண்டாகும். கணவன் மனைவி இடையே சிறு சங்கடங்கள் உண்டாகலாம்.வேலை பளு அதிகரித்த போதிலும் தன வரவுக்கு குறைவிருக்காது. வீட்டில் யாரேனும் உடல் நலக் குறைபாடு உள்ளவர்கள் இருந்தால் சுகம் பெறுவர். மீடியா, பத்திரிக்கை துறையை சேர்ந்தவர்களுக்கு அனுகூலமான நிலை நீடிக்கும் ஆயினும் படபடப்பு, அலைச்சல் இருக்கும். மூத்த சகோதரருக்கு உங்களால் சில உதவிகள் அனுகூலங்கள் உண்டாகும். நல்ல தூக்கம், நிம்மதியான போக்கு நீடிக்கும். வார பிற்பகுதியில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகழும். உற்சாகமாக விளங்குவீர்கள். பணியாளர், தொழிலாளர்கள் நிலை சிறப்பாக இருக்கும். வியாபாரிகள் மந்த நிலை நீடிக்கும். அரசியல்வாதிகள் அனுகூலமற்ற சூழ்நிலைகளை எதிர்கொள்வர்.

## கன்னி:



சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். இளைய சகோதரத்துடன் மனக்கசப்பு உண்டாகும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. அரசு சாந்த காரியங்கள் தாமதமாகும். புதிய திட்டங்களை ஒரு மாத காலத்திற்கு தள்ளிப்போடவும். குடும்ப தேவைகளுக்காக நகை அடமானம் வைத்து பணம் புரட்டுவீர்கள். தொழில், பணி நிலை சீராக செல்லும். மனைவி, மக்கள் வழியில் செலவுகள் கூடும். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும். கோயில் வழிபாடு, சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சுப செலவுகள் உண்டாகும். இளைய சகோதரர்கள் நிலை உயரும். சீருடை பணியாளர்கள் ஆதாயம் அடைவர். பிள்ளைகள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். அவர்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும், எதிர்பார்க்கும் சுப செய்திகள் வந்து சேரும். நவ நாகரீக பொருட்களின் சேர்க்கை உண்டாகும். துணைவர்பணிக்கு செல்பவராயின் பணிச்சுமை கூடும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சுறுசுறுப்பாக செயல்படுவார். நீண்டகால முதலீடுகளை சிறிது காலத்திற்கு தவிர்க்கவும். பூர்வீக சொத்து, நிலம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் சாதகமாக முடியும். எழுத்து, மீடியா, செய்தி துறைகளை சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் நடைபெறும். அலுவலத்தில் கடன் வாங்குவீர்கள். சொத்து, நிலம், நீண்டகால முதலீடுகளை விற்று பணமாக்குவீர்கள். விஷ்ணுவின் அவதாரபெயர்கள் அல்லது மகாலட்சுமியின் பெயர் கொண்டவர்கள் அல்லது வங்கிகளின் நகைக்கடன் அல்லது நீண்டகால கடன்கள் சிலருக்கு உண்டாகும். தூக்கம் குறையலாம், நவகிரக வழிபாடு, துர்க்கை அம்மன் வழிபாடு பலனளிக்கும். அலைச்சல் உண்டாகும். 3, 4 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 5, 6 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தவை.

## துலாம்:



தன விரையம், பொருள் விரையம், எதிர்பாராத செலவுகள் ஏற்படும் வாய்ப்பு கள் அதிகம். படபடப்பு, பதட்டம் அதிகரிக்கும். கூடுமானவரை பொறுமை, நிதானம் இழக்காமல் இருக்க வேண்டும். தியானம் செய்யவும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. வயிற்றுப்பதிகளில் தொந் தரவுகள் உண்டாகும். சுப நிகழ்ச்சிகளுக்கான பயணங்கள் சிலருக்கு உண்டாகலாம்.சுபகாரியத்திற்காக கடன் உண்டாகும். பணியாளர்கள், தொழிலாளர்கள் உற்சாகமாக காணப்படுவர். வியாபாரிகள் நிலை மேம்படும். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டாகும். சீருடைப்பணியாளர்கள், காவல், ராணுவம், தீயணைப்புத்துறையை சேர்ந்தவர்கள் ஆதாயம் காண்பர். தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். தனவரவு சீராக இருக்கும். சகோதரர் வழியில் சுப நிகழ்ச்சிகள் உண்டாகும். உறவு வலுப்படும். வீடு, வாகனம், நிலபுலன் வகையில் சில செலவுகள் உண்டாகும். பிள்ளைகளால் சில செலவுகள் ஏற்படும். இளைய பிள்ளைகளால் (மகன் அல்லது மகள்) சில சங்கடங்களை சந்திப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். கலைத்துறையை சேர்ந்தவர்கள் புகழ்,

ஆதாயம் அடைவர். நாள்பட்ட ஆரோக்கிய தொந்தரவுகளிலிருந்து சிலருக்கு நிவாரணம் கிடைக்கும். தோள் பட்டை, கழுத்து வலி வந்து போகும். அரசு பணியாளர், அரசு சார்ந்த பணிகளில் சாதகமான சூழ்நிலை நிலவும். அரசியல் வாதிகள் அனுகூலமற்ற நிலையை சந்திப்பார்கள். வீட்டில் வயதானவர்கள் இருப்பின் உடல் உபாதைகளை சந்திப்பார்கள். மூத்த சகோதர வகையிலும், பெரியோர்களாலும் ஆதரவு, ஆதாயம் உண்டாகும். துணைவரின் தாயாருக்கு ஆரோக்கிய குறைவு உண்டாகும். தட்சிணாமூர்த்தி வழிபாடு சங்கடங்களை மட்டுப்படுத்த உதவும். 5, 6 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 8,9 தேதிகள் புதிய திட்டங்களுக்கு உகந்தவை.

## விருச்சிகம்:



தனவரவு, குடும்ப சூழ்நிலை சீராக செல்லும். மனமகிழ்ச்சி கூடும், தொழில் வகையில் பொறுப்பு, வேலைப்பளு அதிகரிக்கும். வீட்டில் சில பழுதுபார்ப்பு, புனரமைப்பு வேலை களை மேற்கொள்வீர்கள். பிள்ளைகளால் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். சுறுசுறுப்புக்காக செயல்படுவீர்கள், பணியிடத்தில் மதிப்பு, மரியாதை உயரும். சீருடை, காவல், ராணுவம், மருத்துவம், காவல் துறையை சேர்ந்தவர்கள் புகழடைவர். மனைவியின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. பெரியோர்களின் அனுக்கிரகம், ஆசீர்வாதம் உண்டு. திருமணம், வைபவம், விஷேச நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள் சிறுதூர பயணம் உண்டு. வாகனங்களை கவனமாக இயக்க வேண்டும். வாகன வகையில் சில செலவுகள் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகள் படிப்பில் சராசரியாக இருப்பார்கள். எதிர்கால திட்டங்களுக்காக அலைச்சல் ஏற்படும். துணைவி பணிக்கு செல்பவராயின் பணியிடத்தில் போனஸ் அல்லது நவநாகரீக பொருட்களை பரிசாக பெறுவார். பணிக்கு செல்லாதவரானால், மூத்த சகோதரி வகையில் ஆதாயம் உண்டாகும். தெய்வீக காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். வியாபாரிகள் தொழில் சிறக்கும், விற்பனை அதிகரித்து நல்ல இலாபம் அடைவர் எனினும் கூட்டாளிகளுடன் அல்லது முக்கிய வாடிக்கையாளருடன் கருத்து வேறுபாடுகள் தோன்றலாம் அனுசரித்து செல்வது நன்மை தரும். அரசியல், அரசு துறையை சார்ந்தவர்கள் அவமானங்களை சந்திப்பர். 4, 5 தேதிகள் நலம் தரும். 7,8 தேதிகளில் கவனம் தேவை.

## தனுசு:



தைரியம்,உற்சாகம்கூடும். ஆரோக்கியம் மேம்படும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். வேலை, பணிகளில் சவால்களை சந்திப்பீர்கள். மேலதிகாரிகளிடம் பொறுமையாக நடந்துகொள்ளவும். குடும்ப சூழ்நிலை திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு ஏற்படும். குழந்தைகளுக்கு திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். நவநாகரீக பொருட்களை விற்பவர்கள் நல்ல ஆதாயம் பெறுவர். அரசு துறை பணியாளர்களுக்கு பணி நிமித்தமாக அலைச்சல் உண்டு. சிலர் சுக, சௌகரிய தேவைகளுக்காகநகை கடன் ஏற்படும். தொழிலாளர்களுக்குவருமானம் உயரும். சித்தர்கள், ஆஞ்சநேயர் வழிபாடுசெய்வீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. தாயாருடன் மனக்கசப்பு ஏற்படலாம். விட்டுக்கொடுத்து செல்லவும். குழந்தைகள் படிப்பில் மந்தநிலை நீடிக்கும். சிலருக்கு படிப்பில் தடை, தடங்கல், தாமதங்கள் உண்டாகும். சனிபகவானுக்கு புதன் கிழமைகளில் எள் விளக்குபோடுதல், ஆஞ்சநேயர் வழிபாடு பலனளிக்கும். குலதெய்வ பிரார்தனை, வழிபாடு செய்வீர்கள். தந்தை பணிக்கு செல்பவராயின் மேலதிகாரிகளால் சில சங்கடங்களை சந்திப்பார். தகவல் தொழில்நுட்பம், பத்திரிக்கை, மீடியா, எழுத்து துறைகளை சேர்ந்தவர்கள் பயனடைவர். பணிக்கு செல்லும் பெண்கள் பயனடைவர். வங்கி, இயந்திர துறைகளை சேர்ந்தவர்கள் சில அசௌகரியங்களை எதிர்கொள்வர். குடும்பத்தாருடன் சுமூக நிலை நீடிக்கும், சுப விரைய செலவுகள் உண்டாகும். தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். புதிய வாகன சேர்க்கை சிலருக்கு உண்டாகும். எதிர்கால தேவைகளுக்காக சிலருக்கு நீண்டகால கடன்கள் உண்டாகும். தொழிலாளர், பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரித்த போதிலும் உரிய பலன் கிடைக்கும். வங்கி, இயந்திர துறைகளை சேர்ந்தவர்கள் சில அசௌகரியங்களை எதிர்கொள்வர். 12, 13 தேதிகள் புதிய முயற்சிகளுக்கு உகந்தவை.

## மகரம்:



அனாவசிய படபடப்பு, பதட்டம் உண்டாகும். சிலருக்கு நிலம் தொடர்பான பிரச்சனைகள் ஏற்படலாம் எனினும் சாதுர்யமாக எதிர்கொண்டு பயனடைவீர்கள். தாயாரின் ஆசிகள் ஆதரவு உண்டு. எதிர்பார்க்கும் பணவரவு மற்றும் பொருட்களின் சேர்க்கை

உண்டு. ஆன்மீக ஈடுபாடு கூடும். தொழில், வேலை மற்றும் குடும்ப நிலவரம் சீராக செல்லும். சிறுசிறு உடல் உபாதைகள் வந்து போகும். மனைவியால் ஆதாயம், பொருள் சேர்க்கை உண்டாகும். தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலைமை சீரடைந்து முன்னேற்றத்துக்கானபாதை தெளிவாகும். கோவில், திருவிழா, சுபநிகழ்ச்சிக் கான பயணங்கள் ஏற்படும். சிலர் பூர்வீக பெரியவர்கள் வாழ்ந்த இடத்திற்கு சென்று வருவார்கள். அலைச்சல் மிகும். இரத்த கொதிப்பு, உஷ்ண சம்பந்தமான தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகலாம். வண்டி வாகன சேர்க்கை, வியாபார அபிவிருத்திக்கான திட்டங்களை வியாபாரிகள் திட்டமிடுவார்கள். தொழிலாளர்களின்ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு பணி, போட்டி தேர்வுகளில் வெற்றி உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். மனைவி வழி உறவுகள்மூலம் பொன், பொருள் சேர்க்கை சிலருக்குஉண்டாகும். பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். அரசியல்வாதிகள், அரசு உயரதிகாரிகள்அனுகூல மற்ற சந்தர்ப்பங்களை எதிர்கொள்ள வேண்டிவரும். வயிற்று பகுதியில் உடல் தொந்தரவுகள் உண்டா கும். எதிர்பாக்கும் காரிய பலிதம் உண்டு. உரிய மதிப்பு மரியாதை கிடைக்கும். தந்தையின் ஆரோக் கியம் மேம்படும். நீண்டகால ஆசைகள் சிலவற்றை பூர்த்தி செய்வீர்கள். தூக்கம் குறையும். 11, 12 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

## கும்பம்:



காரிய தாமதம், சில சுய தேவை களுக்கான விரைய செலவுகள் உண்டெனினும் மனத்தெளிவு பிறக்கும். தொழி லாளர்கள், பணியாளர்கள் கடந்தகால உழைப்புக்கு தற்போது பலன் அனுபவிக்க தொடங்குவார்கள். தொழில் முறை அலைச்சல், பயணங்கள் உண்டாகும். காவல், ராணுவம், மருத்துவம், இயந்திர துறை களை சேர்ந்தவர்கள் ஆதாயம் அடைவர். சிறிது படபடப்பு வந்து போகும். வியாபாரிகளுக்கு சுமாரான வியாபாரம் மற்றும் தொழில் நிலை நீடிக்கும். ஆன்மீக ஈடுபாடு உண்டாகும். மனதில் உள்ள பெரிய திட்டங்களை செயல்படுத்துவதில் தடை, தாமதங்கள் நீடிக்கும். தன வரவு சீராக இருக்கும், நிதி, நீதி, ஆன்மீக சேவை சார்ந்த நிறுவனங்களில் பணி புரிபவர்கள் சிறப்பான நிலை அடைவர். பூர்வ புண்ணிய கர்மா ஆதர வாக பலனளிக்கும். சிலருக்கு குடும்பத்தில் புதிய வரவுகள் உண்டாகும். ஆன்மீக புருஷர் களின் சந்திப்பு உண்டாகும். மூத்த சகோதர சகோதரி, பெண் பிள்ளைகளுக்காக சில செலவுகள் செய்வீர்கள். சுக, சௌகரிய தேவை களுக்காக செலவுகள் உண்டாகும். வீட்டு சாதன பொருட்களின் சேர்க்கை உண்டாகும். தூக்கம் குறையும். பிள்ளைகளின் படிப்பில்மாற்றம், இட மாற்றம், உண்டாகலாம். கை, கால், மூட்டு வலி போன்ற தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகும். துணையின் வழியின் உற்சாகம், ஆதரவு, தைரி யம், பணவரவு உண்டாகும். துணை பணிக்கு செல்பவராயின் விரும்பும் பதவி, பெயர், புகழ், செல்வாக்கு முதலிய நேர்மறை பலன்கள் கிடைக் கும். நடைமுறை திட்டங்கள் சீராக நடை பெறும். புதிய திட்டங்களை சிறுது காலத்திற்கு தள்ளி வைக்கவும். அல்லது தங்கள் ஜாதக தசா, புத்தி பலன்களை அறிந்து செயல்படுத்தவும். சேவைத் துறையை சேர்ந்தவர்களுக்கு புகழ் சேரும். 17, 18 தேதிகளை புதிய திட்டங்களுக்கு தவிர்க்கவும்.

## மீனம்:



ஆன்மீக, தர்ம சிந்தனை கூடும். புனித யாத்திரைகள், குல தெய்வ வழிபாடு உண்டாகும். நிதி, சேவை, நீதித்துறை மற்றும் உடல் உழைப்பை தொழிலாக கொண்ட தொழிலாளர்கள், பணியாளர்கள், வியாபாரிகள் பலன் அடைவர். குடும்ப சூழ்நிலை சீராகசெல்லும். அரசு காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு பிள்ளைகளால் சில சங்கடங்கள் உண்டாகலாம். வியாபாரிகள் அலைச்சல் உண்டு எனினும் ஆதாயம் காண்பர். தாயாருடன் சுமூக போக்கு நீடிக்கும் ஆதரவு உண்டாகும். சுப விரைய செலவுகள் உண்டாகும். தனவரவு, ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரைகளை ஏற்று செயல்படுவார்கள். வேலையில் சிலருக்கு டென்ஷன், வேலைப்பளு உண்டாகும். இளைய சகோதர வகையில் சில அனுகூலமற்ற செய்தி கள் வரக்கூடும். தியானம் செய்வது நல்லது. துணையால் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும், அவரின் மூலம் குழந்தைகளுக்கு வேண்டிய தேவைகள் பூர்த்தியாகும். துணைவழிஉறவுகளின் சந்திப்பு ஏற்படும் நன்மை விளையும். அரசு துறை, அரசியல் சார்ந்தவர்கள் பயனடைவர். நவ நாகரீக பொருட்கள், பொன், வெள்ளி பொருட்களின் சேர்க்கை உண்டாகும். ஆசைகள் பூர்த்தியாகும். மகிச்சியான நிகழ்வுகள், நிம்மதியான உறக்கம் உண்டு. துணையின் தந்தையாருக்கு சில உடல் உபாதைகள் உண்டாகும். கவனம் தேவை. குழந்தைகள் படிப்பில் கவனம் சிதறலாம், புதன் அல்லது சனி கிழமைகளில் தட்சிணாமூர்த்தி வழிபாடு செய்வது உகந்தது. 3, 4 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

# பஞ்சராத்திரம்

கடவுள் உருவாக்கிய மதம்

இந்த மரபு தவிர பஞ்சராத்திரம்என்ற ஒரு மரபும் வைஷ்ணவத்தில் உண்டு. ஆனால் இந்த மரபை வை தீக வைஷ்ணவர்கள் பெரியதாக எடுத்து கொள்வதில்லை பஞ்சராத் திரம் என்றால் தத்துவ ஞானம் முத்தி பெருவதற்கான வழி, பக்தி நெறி,உடலை பக்குவபடுத்தும் யோக மார்க்கம், பொறி புலன்களை பற்றிய அறிவு ஆகிய ஐந்தும் கலந்ததாகும் இவைகளை பற்றிய விரிவான விளக்கத்தை நாரத மகரிஷி எழுதிய நாரத பஞ் சராத்திரம் என்ற நூலில் காணலாம். சாண்டில்யர், ஔபகாயனர், மௌஞ்சாயினர், கௌசிகர், பாரத்வாசர் என்னும் ஐந்து முனிவர்களுக்கு இந்த ஐந்து நெறிகளை இறைவனாகிய திருமால் போதித்ததாக ஐதீகம் உள்ளது.

இது தவிர வைஷ்ணவத்தில் ஏராளமான பக்தி பிரிவுகள் இருந்தாலும் மிக முக்கியமானது இவைகள் தான் இவைகளின் மைய கருத்தை ஆழ்ந்து சிந்தித்தோம் என்றால் நாம் அனுபவிக்க வேண்டிய இறைவனின் திருக்கோலம் இறை வனின் அருளமுதை சுவைக்கும் உயிர்களின் இலக்கணம் இறைவனை அடைய தடையாக இருக்கும் இடைஞ்சல்கள் முத்தி நெறி என்ற வைகுந்த வாசலை அடைவதற்கான வழிகள் இறுதி நோக்கமான பகவத் அனுபவம் ஆகியவைகள் மட்டுமே என்று உறுதியாக சொல்லலாம்.



www.aanmeegamalar.com

மிக விசேஷமாக ஸ்ரீ வைஷ்ணவத்தில் மட்டுமே இறைவனை பகவான் என்ற அடைமொழியில் அழைக்கிறோம் ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீரியம்,தேஜஸ் ஆகிய ஆறு வகையான குணங்களை ஒன்றாக கொண்டவன் என்பதே பகவான் என்ற வார்த்தையின் உண்மை பொருளாகும் இத்தகைய பகவான் சத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம்,



ஆனந்த்வம், அமலத்வம் என்ற உண்மை, அறிவு, எல்லை இல்லா நிலை, இன்பம், தூய்மை ஆகிய வடிவோடு பக்தர்களுக்கு அருள்பாலிப்பதாகவும் நம்ப படுகிறது.

இறைவனின் திருகுணங்களாக தென் கலை பிரிவினர் சொல்லும் சௌலப்யம், சௌசீல்யம், காருண்யம் ஆகியவைகளும் இங்கே சிந்திக்க தக்கதாகும்.

இவ்வளவு பெருமை வாய்ந்த திருமாலின் அருள் அமுதத்தை சாதாரண மனிதன் கூட நேருக்கு நேராக அனுபவிக்கும் ஒரு மார்க் கத்தை ஸ்ரீ வைஷ்ணவம் உலகுக்கு தந்துள்ளது அந்த அமுதம் என்னவென்றால் ஓம் நமோ நாராயணாய என்று எட்டெழுத்து மந்திரமாகும் இந்த மந்திரத்தின் ஆழ்ந்த அகன்ற விரிவான பொருளை நம்மால் சிந்திக்க முடியாது என்றாலும் ஓரளவாவது சிந்திக்கும் தகுதியை நமக்கு நாராயணன் தந்துள்ளான் இதில் வரும் ஓம் என்ற பிரணவம் மூல மந்திரம் என்பது நாம் அறிவோம் வைஷ்ணவ சித்தாந்தபடி அ,உ,ம என்ற மூன்று எழுத்துகளின் சேர்க்கை ஒலியே ஓம் என்பதாகும் இதனுள் இருக்கிறன அகரம் இறைவனையும்,மகரம் உயிரையும்,உகரம் படைத்தலையும் சுட்டுவதாகும்.

உயிரானது இறைவன் ஒருவனுக்கே அடிமை என்பதை காட்டுவதே மந்திரத்தின் கடேசி பகுதியில் வரும் நம என்ற வார்த்தையாகும் நம என்ற வார்த்தையில் ந என்ற முதல் எழுத்தில் இல்லை என்ற பொருள் மறைந்திருக்கிறது மீதமுள்ள மகாரம் உயிரை குறிப்பதாக அறிந்தோம் அதாவது இதன் பொருள் நானும் எனக்குறியவன் அல்ல என்பதாகும். அப்படி என்றால் நான் யார்க்குறியவன் சந்தேகமே வேண்டாம் நான் நாராயணன் ஒருவனுக்கே அடிமை அவனுக்கே நான் தாசானு தாசன் இந்த மந்திரத்தில் மீதமுள்ள நாராய ணாய என்பது இதை தான் சொல்லாமல் சொல்கிறது மேலும் இதில் உள்ள நார,அயன,ஆய என்ற வார்த்தைகளுக்கு தனிதனி பொருள் உண்டு.

நார என்பது நரனிடம்இருந்து தோன்றிய உயிர்களை குறிக் கும்.அயன என்று சொல் உபா யம், பலன், ஆதாரம் என்ற பல பொருள்களை தருகிறது. இவை இரண்டும் சேர்ந்த நாராயண என்ற சொல் உயிர்களுக்கு ஆதாரம் என்ற பொருளை காட்டுகிறது. கடேசியாக உள்ள ஆய என்ற பதம் பணி என்ற பொருளை கொண்டது அதாவது உயிர்கள் எப்போதும் இறைவனின் பணிக்காகவே உரியவைகள் என்பது இதன் அர்த்த மாகும் ஆக ஓம் நமோ நாராயணாய என்ற ார்த்தைகள் மனிதனின் ஆணவம் அழிகிறது ஆண்மை பிறக்கிறது ஆன்ம நேய ஒருமைப்பாடு ஏற்படுகிறது. இதனால் தான் பெரியாழ்வார்

மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை
மூன்று மாத்திரை உள்எழ வாங்கி
மேலை வண்ணனை மேவுதிர் ஆகில்
விண்ண கத்தில் மேவலும் ஆமே

என்று சொல்கிறார் அதாவது எட்டெழுத்து மந்திரத்தை மூன்று மாத்திரை அளவு மூச்சு காற்றுடன் உள்ளுக்குள் இழுத்து தியானம்



செய்தால் இறைவனாகிய திருமாலின் பரமபதம் கிடைக்கும் என்பது ஆழ்வாரின் அமுத மொழியாகும் வைஷ்ணவம் வெறுமனே வாழும் நெறியாக மட்டுமல்லாது இறைவனோடு பக்தனை கெ□ண்டு சேர்க்கும் நெறியாகவும் இருக்கிறது என்று பல பெரியவர்கள் சத்திய வாக்காக சொல்வது இதனால் தான் எனவே நாமும் ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ நாராயணாய என்று மீண்டும் மீண்டும் சொல்லி அடியவரின் துன்பங்களை களைந்து பாவங்களை போக்கி குழந்தை போல் அரவணைத்து கொள்ளும் திருமாலின் திவ்விய பாத கமலங்களை சிக்கென பிடித்து வைகுண்ட இன்பத்தை வாழும் போதே பெறுவோம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434




# நாடி நரம்புகளுக்கு புத்துணர்ச்சி அளித்து வியாதிகளை பறந்தோட வைக்கும்

# கடும்பாடி மாரி சின்னம்மன்

திருக்கழுக்குன்றத்தில் இருந்து பட்டிக்காடு கிராமம் வழியாக மாமல்லபுரம் செல்கையில் அமைந்துள்ளது கடும்பாடி கிராமம். மாமல்லபுரம் கல்பாக்கம் மார்க்கமாகவும் இந்த ஊருக்கு செல்லலாம். பாரத தேசத்தில் மற்ற மாநிலங்களில் இல்லாத ஒரு சிறப்பு தமிழகத்தில் மட்டும் உள்ளது.

சிறிய ஊரோ அல்லது பெரிய ஊரோ அங்கு அம்மன் கோயில் நிச்சயம் உண்டு. அம்மன் கோயில் இல்லாத ஊரே இல்லையென்று சொல்லலாம். மாரியம்மன், செல்லியம்மன், ஒசூரம்மன், கன்னியம்மன், அங்காளம்மன், எல்லையம்மன், பச்சையம்மன், வடிவுடையம்மன், திருவுடையம்மன், கொடியிடையம்மன் என விதவிதமான பெயர்கள் வைத்து அம்மனை வழிபாடு செய்வார்கள்.

தமிழர்கள் ஏதாவது ஒரு அம்மனை தங்கள் குலதெய்வமாக. இல்லம் காக்கும் தெய்வமாக கொண்டாடி வருகின்றார்கள். இது காலம் காலமாக நடந்து வரும் நிகழ்ச்சியாகும்.

## கோயில் அமைப்பு:

இந்த கிராமம் வானம் பார்த்த பூமி. ஒரு சில வீடுகளும் சில மாடிவீடுகளும் உள்ளன. மற்றவை சின்னஞ்சிறு குடிசைகள். மாரி சின்னம் மனின் திருக்கோயில் இந்த கிராமத்தில் தான் உள்ளது. கோயிலுக்குத் தெற்கு புறத்தில் இந்திர தீர்த்தம் எனும் திருக்குளம் உள்ளது

கடுமையான கோடைகாலத்திலும் இக் குளத்தில் நீர் வற்றியதே இல்லையென்பது








மகிழ்ச்சிக்குரிய செய்தி மட்டுமல்ல அன்னையின் அருளும் இந்தத் தீர்த்தத்திற்கு உண்டு எனப் பொருள் கொள்ளலாம்.

குளத்தின் தெற்கு புறத்தில் கண்ணபிரான் கோயிலும் பிடாரி அம்மன் கோயிலும் அமைந் துள்ளன. வடக்கு புறத்தில் தான் மாரியம்மன் கோயில் இருக்கின்றது. திருக்கோயிலின் முன்னர் கொடிமரம், அதையடுத்து வாகன மண்டபம், பின்னர் முக மண்டபம், அதையடுத்து கருவறை மண்டபம், அங்கிருந்து பார்த்தால் சுதையருகே வீற்றிருக்கும் சின்னம்மனின் உருவத்தையும் கீழ்கழுத்து அளவேயுள்ளதை தரிசிக்கலாம்.

அம்மன் கற்சிலையையும் சின்னம்மனின்



சிரசின் மீது ஐந்துதலை நாகம், காதுகளில் நாகாபரணம், நெற்றியில் திருநீறு, நடுவில் குங்குமத் திலகம், அருள் ஒளி வீசும் கண்கள். அம்மனுக்கு நான்கு திருக்கரங்கள். கரங்களில் சூலம், உடுக்கை, கத்தி, பொற்கிண்ணம்.

இடது காலை மடித்து, வலது காலை கீழே தொங்கவிட்ட நிலையில் அன்னை அமர்ந்து அருட்காட்சியளித்துக் கொண்டிருப்பது காணக் கிடைக்காத காட்சியாகும்.

## ஆலய வரலாறு:

கழுத்தளவு உள்ள அம்மனின் கற்சிலை ஒரு பனை மரத்தினடியில் புற்றில் இருந்ததாம். புற்றிலிருந்து சுயம்பு வடிவத்தில் தானாகவே அம்மன் வெளிப்பட, பின்னரே அம்மனுக்கு ஆலயம் எழுப்பப்பட்டுள்ளதாம்.

மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது' என்பார்கள். அதே போல, பெயரள வில் தான் அன்னை சிறியவளே தவிர, சாந்தத்திலும், அருள் வழங்குவதிலும் மிகப் பெரிய மகாமாரியம்மன் என்றே கூறலாம்.

ஆடி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி, மாசி, பங்குனி மாதங்களில் சிறப்பாக விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. மாசி மாதத்தில் நடைபெறும் தெப்பல் உற்சவம் இங்கு மிகவும் விஷேஷமாகும். பல ஊர்களிலி ருந்து மக்கள் திரளாக வந்து இங்கு கலந்து கொள்வார்கள். இந்த உற்சவ நாட்களில் இந்தக் கிராமம் அன்னையின் அருளால் நிரம்பி வழியும்.

www.aanmeegamalar.com

## முந்தைய கால வழிபாடு:

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் இந்தக் கோயிலில் செடிலாட்டம் விசேஷ







பிரார்த்தனையும் வழிபாடும் இருந்து வந்ததாகக் கூறுகின்றனர். இந்தப் பிரார்த்தனை மிகவும் கொடூரமானது என ஆங்கிலேய ஆட்சியில் செடிலாட்டம் வழிபாட்டினை தடை செய்துவிட்டதாகக் கூறுகிறார்கள். செடிலாட்டம் என அழைக்கப்படும் இந்த பிரார்த் தனை செலுத்துபவர்கள் தங்கள் முதுகில் கொக்கிகளை செலுத்திக் கொக் கிகளை அதற்கென உள்ள நெடுங்கம்பத்தில் மாட்டி பிரார்த்தனைக்காரர்களைத் தொங்கவிட்டு ஆட விடுவதுதான் செடிலாட்டம் எனப்படுவதாகும். இதற்காக உள்ள மரக்கம்பம் இன்னமும் இந்தக் கோயிலின் முகப்பில் ஞாபகச் சின்ன மாக இருந்து வருகின்றது. கோயில் மிக ஆரோக்கியமான சூழ்நிலையில் அமைந்திருப்பது இங்கு வீசும் குளிர்ந்த காற்றிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

## ஆலய சிறப்பு:

கடும்பாடி மாரியம்மன் கோயி லுக்கு சென்று அங்குள்ள குளத்தில் நீராடி, அம்மனை வணங்கி வந்தால் உங்கள் நாடி நரம்புகளில் புத்துணர்வு பெற்று வியாதிகள் நீங்கும் என்பது அனைவரின் ஒருமித்த நம்பிக்கை பக்தர்கள் அதுவும் வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையோடு சென்றால் நோய்கள் தீரும் என்பதில் ஐயமில்லை. அன்னை கடும்பாடி மாரி, கை கொடுக்கும் மாரி, கை விடாத மாரி, கண்கண்டமாரி, கண் அளிக்கும் மாரி எனப் புகழ் பெற்றவள். எங்கும் அமர்ந்து அருளாட்சி புரிகின்றாள் அன்னை.

கடும்பாடி மாரியம்மனை நாடி வந்து, வழிபட்டு, வேப்பிலைக் கொத்தும், பன்னீரும், மஞ்சள் காப்பும், பிரசாதமாகப் பெற்று செல்பவர்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெறுவார்கள் என்கின்றனர் இங்கு சென்று வந்த பக்தர்கள். அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது இக் கோயில்.

செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமை களில் இந்த கோயிலுக்கு வந்து குளத்தில் நீராடிவிட்டு பொங்கல் வைத்து வழிபாடு செய்பவர்கள் அதிகம். நேரம் இருப்பின் ஒரு முறை ஆலயத்திற்கு சென்று அம்மனை வழி பாடு செய்துவிட்டுவாருங்கள். அம்மன் அருள் கிடைக்கும். அனைவரும் வருக. அம்மன் அருள் பெறுக.



வேலன்

– வேலன், போன்:
9894836096
திருக்கழுக்குன்றம்.




# வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரேக்ய பீடத்தில் குஜராத் பால விபத்தில் காயமடைந்தவர்கள் பலியானவர்களுக்கு சிறப்பு பிரார்த்தனை

வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் பீடாதிபதி டாக்டர். ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் தலைமையில், அக்டோபர் மாதம்27ம் தேதி முதல் உலக மக்கள் உடல், மன ரீதியான நோய்கள் நீங்கி நல் வாழ்வு பெறவும், ஸ்தல அபிவிருத்தி மற்றும் மூர்த்தி ஸ்தானத்திற்காகவும் 10 நாட்கள் லட்சார்ச்சனை நடைபெற்றது.

ஐப்பசி மாத சப்தமி திதியை முன்னிட்டு அக்டோபர் 31ம் தேதி திங்கள்கிழமை ஸ்ரீ கார்த்தவீர்யார்ஜுனர் ஜெயந்தி விழா நடைபெற்றது. ஸ்ரீகார்த்தவீர்யார்ஜுனர் ஜெயந்தியை ஒட்டி, இந்தியாவிலேயே முதல் முறையாக ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், பச்சைக்கல்லில் 4 அடி உயரத்தில் 16 கரங்களுடன் நின்ற கோலத்தில் தனி சன்னதி கொண்டுள்ள ஸ்ரீ கார்த்தவீர்யார்ஜுனர்க்கு சிறப்பு ஹோமம் மற்றும் பால், தயிர், கரும்புச்சாறு போன்ற 16 விதமான பொருள்களை கொண்டு சிறப்பு அபிஷேகம், நவகலச திருமஞ்சனம், புஷ்பாஞ்சலி, தீபசேவை ஆகியவை நடைபெற்றன.

4.11.2022ம் தேதி வெள்ளிக்கிழமை, 'பாபாங்குசா' ஏகாதசி என அழைக்கப்படும் ஐப்பசி மாத ஏகாதசி முன்னிட்டு மூலவர் தன்வந்திரிபெருமாளுக்கு, நெல்லிப்பொடி அபிஷேகமும், சிறப்பு புஷ்ப அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்றன.

மேலும் கடந்த மாதம் 27ம் தேதி தொடங்கி நடைபெற்று வந்த லட்சார்ச்சனை, சிறப்பு ஹோமங்கள், பூஜைகளுடன் நிறைவு பெற்றது.

நவம்பர் 1ம் தேதியன்று ஐப்பசி மாத சப்தமி திதியை முன்னிட்டு காலை 7.30 மணி முதல் மதியம் 2 மணிவரை, நவக்கிரக தோஷங்கள் அகல, நிலம், பூமி, வீடு மனை மற்றும் சொத்து தகராறு வழக்குகள் நீங்கிட, தோஷங்கள், திருமணத்தடை அகல, மன அமைதி பெற்று, மன சோர்வு நீங்கி, திருஷ்டி, செய்வினை அகன்றிட, கணவன் மனைவி ஒற்றுமை பெற, கடன் தொல்லை அகன்றிட, பதவி, படிப்பு, தொழில், வியாபாரம் போன்றவற்றில் ஏற்படும் தடைகள் விலகிட வேண்டி மங்கள சண்டியாகம், பைரவர் பூஜைகள் நடைபெற்றது.

மகிஷாசுர மர்த்தினிக்கு 13 வகையான கலசங்களில் வைத்து பூஜிக்கப்பட்ட தீர்த்தங்கள் மற்றும் பால், சந்தனம், மஞ்சள், பன்னீர், திரவிய பொடி ஆகியவை கொண்டு சிறப்பு அபி ஷேக, ஆராதனையும், அதை தொடர்ந்து ஸ்ரீ மகிஷாசுர மர்த்தினிக்கு சிறப்பு அலங்காரத்துடன் புஷ்பாஞ்சலியும், தீபசேவையும் நடைபெற்றது.

சண்டி யாகத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பீடாதிபதி டாக்டர். ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் பிரசாதமும், ஆசியும் வழங்கினார்.

இந்த யாகத்தின் போது, குஜராத் மாநிலம் மோர்பியில் நடைபெற்ற கேபிள் பால விபத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டியும், விபத்தில் இறந்தவர்கள் முக்தி அடைய வேண்டியும் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

இந்த சிறப்பு பிரார்த்தனையில் பக்தர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# நம்முடைய ஊழ்வினை நிர்ணயிக்கப்பட்டதில்லை

அன்பு குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: “உங்கள் வாழ்வின் அனைத்து அழகான ஆக்கபூர்வமான குணங்களையும் நினைவுகூர்ந்து அவற்றின்மீது ஒருமுகப்படுவதற்கு முயலுங்கள். உங்களுடைய குறைபாடுகளை உறுதிப்படுத்திக்கொள்ளாதீர்கள். உங்களுடைய மாபெரும் எதிரி நீங்களே. நீங்கள் உருவாக்கிய பழக்கத் தடங்களிலிருந்து நீங்கள் வெளியேற முடியாவிட்டால் அதற்கு நீங்கள் மட்டுமே பொறுப்பாவீர். அவ்வாறு வெளியேற நீங்கள் ஓர் உறுதியான தீர்மானம் மேற்கொள்ளவேண்டும். உங்களைத் தவிர வேறு எவரும் உங்களை ஊழ்வினையில் கட்டுண்டுவைத்திருக்கவில்லை. மகான்களின் உதாரணம், உங்களுடைய விதி நிர்ணயிக்கப்பட்டது என்பதை நம்பாமலிருக்கத் துவங்குமாறு உங்களைச் செய்ய வேண்டும். தங்களுடைய மனப்பான்மையை மாற்றிக் கொண்டதன் மூலம் அவர்கள் மகான்கள் ஆனார்கள். நீங்களும் அதையே செய்ய முடியும். பொதுவாக வாழ்க்கையில் மாபெரும் சாதனைகளைச் செய்தவர்கள்கூட மாபெரும் தோல்விகளை சந்தித்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் அவற்றால் வீழ்ச்சியடையச் செய்யப்படுவதை ஏற்கவில்லை. சாதித்தவர்கள் எவரும் பல போர்களை வெற்றி பெற்றவர் மற்றும் சிலவற்றில் தோல்வி அடைந்நார்கள். ஆனால் அவர்கள் தங்களின் எதிர்மறையான ஊழ்வினைக்கு அடி பணியவில்லை.”

142

பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு

மேம்படுவதற்காக

மேலும் அவர் தொடர்கிறார்: “ நான் சிறுவனாக இருந்தபொழுது எனக்கு நாட்பட்ட அஜீரணம் இருந்தது. அந்த வியாதிக் காக நான் ஒரு பெட்டி நிறைய மருந்துகள் வைத்துக்கொண்டிருந்தேன். என் குருநாதர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரிடம் முதன் முதலாக இதைப்பற்றி பேசியபொழுது அவர் கூறினார்.”தெய்வீக குணமாக்குதலை ஏன் முயற்சி செய்யக்கூடாது? நீ இவ்வாறு துன்பப்படத் தேவையில்லை. “எதுவும் பலனளிக்காது என நான் நம்பவைக்கப்பட்டிருந்தேன். ஆனால் அவர் என்னிடம் இவ்வாறாகப் பேசியபொழுது அவரது திட நம்பிக்கை என்னைக் கவர்ந்தது. அந்த நாளிலிருந்து நான் குணமாக்கப்பட்டேன்.”





குருப்ரியா

"உங்கள் பலவீனங்கள், இன்னல்கள் ஆகியவற்றிலிருந்து தப்பமுடியாது என்று நம்பிக்கொண்டு உங்கள் மீதே நீங்கள் கழிவிரக்கம்கொண்டிருக் கின்றீர்கள். அந்த வகையான எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் ஓர் பிச்சைக்கார மனிதன் என்ற உணர்வை விலக்கிவிடுங்கள். நீங்கள் இறைவனின் குழந்தை என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். நான் விரும்பும் எதையும் என்னால் கட்டளையிட முடியும் என்பதை நான் அறிவேன். மேலும் இயற்கை எனக்கு கீழ்படியும்," என்று குருதேவர் அறிவுறுத்துகிறார்.

உடலினுடைய வரையறைகளிலிருந்து மனதளவில் விலகியிருங்கள்.

குருதேவர் தொடர்கிறார்: "உங்கள் தேக பழக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்துங்கள். முதலில் அவை உங்கள் குடும்பத்தினுடைய, உஙகள் முன்னோர்களுடைய மற்றும் முழு உலகத்தினுடைய பழக்கவழக்கங்களுடைய தாக்கத்திலிருந்து வருகின்றன. அந்தத் தாக்கங்களை எதிர்கொள்ளுங்கள். உங்களை உடல் ரீதியான ஒரு பழக்கம் அல்லது நிலைமையிலிருந்து விடுவிக்க முயலும்பொழுது அதற்கு மனதளவில் அடிபணியாதீர்கள். உடலினுடைய கட்டுப்படுத்தும் எந்தக் கருத்துக்களையும் உங்கள் மனம் ஏற்றுக்கொள்ள விடாதீர்கள். உடலைப்பேணுங்கள். ஆனால் அதற்கு அப்பாற்பட்டு இருங்கள். உங்களுடைய அழியக்கூடிய வடிவத்திலிருந்து, நீங்கள் வேறுபட்டவர் என்பதை உணருங்கள். உங்கள் மனத்திற்கும் உடலுக்கும் இடையே ஓர் பெரிய மனத்தனடையை உருவாக்குங்கள். சங்கல்பித்துக் கொள்ளுங்கள்: " நான் உடலிலிருந்து வேறானவன். வெப்பம், குளிர் அல்லது பிணி என்னைத் தீண்டாது. நான் சுதந்திரமானவன்." உங்களுடைய வரம்புகள் படிப்படியாகக் குறையும். ஆனால் உடலானது, வியாதியைப்பற்றி மனதை நம்பவைத்தால், பிறகு துன்பம் இரட்டிப்பாகிவிடும். நீங்கள் உங்கள் உடலை புறக்கணித்து, மனதை வலுப்பெறச் செய்யாவிட்டால், நீங்கள் நாட்பட்ட பிணியை அடைய நேரலாம். உங்கள் மனதை உங்கள் உடலால் கட்டுப்படுத்தப்பட ஒருபோதும் விடாதீர்கள்; இது மிகவும் முக்கியம். உடலின் மூலமாக மனதின்மீது சுமத்தப்படும் எந்த நிலைமைகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள் எனத் தீர்மானியுங்கள். ஆனால் மறப்பது மட்டுமே போதுமானது அல்ல. உடல் உணர்வு நிலையிலிருந்து முழுவதுமாக விலகியிருப்பதற்கு உங்கள் மனதை நீங்கள் பழக்கவேண்டும். இது உடைந்துவிட்ட ஒரு கையை, கை இல்லை என்று சங்கல்பித்துக்கொண்டு புறக்கணிக்கவேண்டும் எனப்பொருள்படாது. அதற்கு முறையான உடல் சிகிச்சையை அளியுங்கள். ஆனால் உடல் உபாதையின் காரணமாக மனரீதியாக தொந்தரவடையாமல் இருங்கள். உங்களுக்கு என்ன நேர்ந்தாலும் அதிலிருந்து விலகியிருங்கள். பின்னர் எந்த வேதனையும் உங்களை ஒருபோதும் புண்படுத்த முடியாது என்பதைக் காண்பீர்கள்."

அவர் தொடர்கிறார்: " நலமும் நோயும் மனதின் கனவுகளே. நீங்கள் பரம்பொருள். நீங்கள் அவற்றிற்கு அப்பாற்பட்டவர். நீங்கள் தாற்காலிகமாக உடலில் சிறைபட்டு இருந்தபோதிலும், நலமும் நோயும் ஆகிய சிறைபடுத்தும் எண்ணங்களுக்கு மேலெழுங்கள். பிணியைப்பற்றிய இடைவிடாத பயத்தினால், நீங்கள் அதன் மீது ஒருமுகப்பட்டு அதை உங்களிடம் ஈர்க்கின்றீர்கள். உங்கள் மனதை உடலின் அனைத்து உணர்வுகளும் உட்புகமுடியாதவாறு செய்யுங்கள். நான் பரம்பொருள் என்பதை எனக்கு நினைபூட்டிக்கொள்ளும்பொழுது, உறக்கத்திற்கான தேவையைக்கூட நான் உணர்வதில்லை. மேலும் பரம்பொருள் உறங்குவதில்லை."

எல்லாம் வல்ல சக்தி மனதிற்குள் இருக்கின்றது.

மேலும் அவர் அருளுகிறார்: " இறைவன் படைத்த அற்புதங்களிலெல்லாம் மிகவும் அற்புதமானது மனம். உண்மையில் எந்த மனிதனும் அறிவிலி அல்ல. ஆனால் அவன் மாயையின் ஆழ்துயிலில் இருக்கும்பொழுது அவன் அவ்வாறு தோற்றமளிக்கலாம். மனதின் நுணுக்கமான இந்த அமைப்புகளை நாம் காண்பதில்லை. எல்லாம் வல்ல சக்தி அங்கே இருக்கின்றது. இந்த மனவலிமையை அடையப்பெற்ற குருவின் உதவியினால் நாம் இதை உணர முடியும். நீங்கள் ஒரு வித்தைக்காரனாக ஆக விரும்பினால், வித்தைக்காரர்களுடன் கலந்து பழகுங்கள். நீங்கள் மனவலிமைகொண்டவராக

ஆன்மிகமலர்





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


இருக்க விரும்பினால், வலிமையான மனம் கொண்டவர்களுடன் கலந்து பழகுங்கள். எவருடைய தாக்கம் உங்களுடைய இச்சாசக்தியையும் மனதையும் முடக்கிவிடுமோ அந்த நபர்களுடைய பயனற்ற தோழமையிலிருந்து விலகியிருங்கள். அமைதியும் தனிமையும் வெற்றிக்கான இரகசியங்கள். செயல் நிறைந்த இந்த நவீன வாழக்கையில் அதனுடைய முடிவற்ற கோரிக்கைகளிலிருந்து உங்களை விலக்கி வைப்பதற்கான ஒரே ஒரு வழிதான் உள்ளது. அவ்வப்பொழுது அதைவிட்டு விலகிச் செல்லுங்கள். பல வீனமானவர்கள்தான் சூழ்நிலைக்கு ஆளாவார்கள். உங்கள் ஊழ்வினையின் ராஜ்யமும் அதனுடைய படைப்பாளரும் நீங்களேதான்."

"உங்களுக்குள் ஒரு தேவதையாக இருங்கள். அதுதான் செய்வதற்கு மிகவும் எளிதானது. நீங்கள் சினம் கொள்ளும் ஒவ்வொரு முறையும் அகத்தே சென்று கூறுங்கள்."நான் இறைவனின் அமைதியான குழந்தை. நான் எவ்வாறு இருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கின்றேனோ அவ்வாறே இருக்கிறேன். நட்சத்திரங்களும் தேவதைகளும், அனைத்து படைப்பும் என் விருப்பத்திற்கேற்ப வளையவேண்டும்." உங்கள் மன ஆற்றலை முதலில் சிறு சிறு விஷயங்களில் முயற்சி செய்யுங்கள். பிறகு அதனை மாபெரும் செயல்களுக்காக நீங்கள் அதற்கு வலிமையூட்டுவீர்கள். உங்களுக்கு ஒரு வலிமையான மனம் இருந்து, அதில் ஓர் உறுதியான தீர்மானத்தை வித்திட்டால் உங்களுடைய ஊழ்வினையை நீங்கள் மாற்ற முடியும். நான் நீண்டகாலத்திற்கு முன்பே இறந்திருக்க வேண்டியவன் என்றும் எந்தப் பிணியினால் இறந்திருக்க வேண்டும் என்றும் எனக்குத் தெரிந்திருந்தது."

"வெற்றிபெறவேண்டியதற்கான ஆற்றல் மனதில் இருக்கின்றது. முழு உலகத்தினுடைய நம்பிக்கையின்மைக்கு எதிராக நீங்கள் இந்தக் கருத்தினை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க முடியுமானால், இந்த உண்மையை நீங்கள் உணர்வீர்கள். சில பொழுதுபோக்குகள் அல்லது உங்களால் முடியாது என்று பிறரால் நினைக்கப்படும் எதாவது பொழுதுபோக்குத் திட்டத்தை எடுத்துக்கொண்டு பிறகு அதை நிறைவேற்றுங்கள். எளிய குறிக்கோள்களுடன் துவங்குங்கள். பிறகு படிப்படியாக உங்கள் மன ஆற்றல், அதிக வளர்ச்சியுற்றதாக மாறும். உலகமும் உங்கள் குடும்பமும் உங்களை ஏதோ ஒரு விதமான அடையாளமிடலாம்; ஆனால் மனதால் இடைவிடாது, மேலும் நல்ல முறையில் உங்களை மாற்றிக்கொள்ள செயல்படுங்கள். உங்கள் மனதின் ஆற்றலுக்கு எல்லையில்லை. அந்த எண்ணத்தின்மீது ஒருமுகப்படுங்கள். சாதிப்பதற்கான தீர்மானத்துடன் உங்கள் மனதை நிரப்புங்கள். மேலும் உங்கள் இலக்குகளை நோக்கி ஆக்கபூர்வமான செயல்களுடன் பணியாற்றுங்கள். மேன்மையான பேறுகளை நோக்கி உங்கள் மனதை செலுத்திக்கொண்டேயிருங்கள். ஆன்மீக செல்வத்தைப் பெறுங்கள். பிற எல்லா வகையான வளமும் உங்களின் அடிமையாகும். என்னுடைய வாழ்க்கை அதற்கு ஒரு சான்றாகும்."

குருதேவர் மேலும் தொடர்கிறார்:
" உங்கள் கவனத்தின்மீதான எந்தக் கோரிக்கையும் இன்றி நீங்கள் அமைதியாக அமர்ந்திருக்கும்பொழுது மனதினுள் விலகி இருந்து, ஒவ்வொரு கணமும் அதை ஆக்கபூர்வமாக பயன்படுத்துகள். மாபெரும் சாதனைகள் முதலில் மனதில் உருவாகின்றன. நான் என் மனதை எந்நேரமும் பணியில் ஆழ்த்தி வாய்ப்பு கிடைக்கும் அக்கணமே அதன் ஆக்கபூர்மான எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்துவிடுவேன். பிறகு பலன்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஆக்கபூர்வமான சிலவற்றைச் செய்ய முயலவேண்டும். உங்கள் ஊழ்வினையை சீர்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் ஆரோக்கியம் அல்லது அறநெறி சார்ந்த வாழ்வே அல்லது ஆன்மீக வாழ்வை ஒரு சமயத்திற்கு ஒன்றென எடுத்துக்கொண்டு நீங்கள் விரும்பிய விதமாக மாற்றுங்கள் . இந்த

வாழ்க்கையில் நான் சாதிக்கவேண்டும் என்று விரும்பிய எதையும் என்னால் செய்ய முடிந்தது. சடப்பொருள் மனதிலிருந்து எழுகின்றது. எனவே உடல்ரீதியான கட்டுப்பாடுகள் மனதிற்கு இல்லை. ஆகவே உங்களால் மனதை கட்டுப்படுத்த இயலுமானால், உலகம் முழுவதும் உங்கள்பால் ஈர்க்கப்படும். எப்பொழுதும் நான் விரும்பிய அனைத்தையும் நான் பெற்றிருக்கிறேன். வேறு எல்லாவற்றிற்கும் மேலாக நான் ஏங்கிய ஒரு விஷயம் இறைவனின் என்றும் புதிய ஆனந்தம் ஆகும். மற்ற எல்லா ஆசைகளையும் கலைந்துவிடச்செய்ததின் பலனாக இதையும்கூட நான் அடைந்துள்ளேன்.”

“ஆதரவற்ற தோல்வியாளனாக இருக்காதீர்கள். உங்கள் எண்ணத்தை மாற்றுவதன் மூலம் உங்கள் ஊழ்வினையை நீங்கள் கட்டுப்படுத்துங்கள். நீங்கள் செய்வதற்குத் தீர்மானித்திருக்கும் எதையும் செயல்படுத்துங்கள். இந்த வழியில் உங்கள் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு உங்களுக்குச் செலவு எதுவும் இல்லை. உங்களையே மாற்றிக்கொள்வதற்கு அகமுகமாகத் தீர்மானம் செய்யுங்கள். உங்கள் ஊழ்வினையை நீங்கள் விரும்பியவாறு மாற்றியமைக்க முடியும்.” என்று குருதேவர் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

குருதேவர் நமக்கு நல்ல அறிவுரைகளைத்தான் கூறியிருக்கிறார். அவருடைய போதனைகளை நன்கு ஆழ்ந்து கடைபிடித்தால் அதற்கு நல்ல பயனுள்ளது. இறைவனின் குழந்தைகளான நம் அனைவருக்காக அவர் எவ்வளவோ பொழிவு செய்துள்ளார்; உழைக்கிறார். இதுபோன்று பொழிவாற்றுவதற்குத் தகுதியானவர்கள் இவ்வுலகில் கிடைப்பது மிகவும் அரிது. குருதேவர் ஒரு சொல் வேந்தனும்கூட, ஆவார். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழிக்கேற்ப நாம் அனைவரும் நடந்துகொள்ளவேண்டும். அவ்வாறெனில் தகுந்த சமயத்தில் நமக்கு, எல்லாம் கைகூடும். இதயபூர்வமாக, உள்ளார்ந்த அன்புடன் குருதேவர் நமக்காக பணி செய்துகொண்டிருக்கிறார்; அதை நாம் மதிக்கவேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டும்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# நாலு விஷயங்களை மறக்காதீங்க

- **துக்கம், கவலை, இயலாமை, கஞ்சத்தனம்** இந்த நான்கு விஷயங்களை நம் மனதிலிருந்து நீக்கவேண்டும்.
- **தியானம் யோகா, புத்தகம் வாசிப்பு, உடற்பயிற்சி, சேவை செய்தல்** இந்த நான்கு விஷயங்களை நாம் எப்போதும் எந்த இடத்திலும் மனமுவந்து செய்யவேண்டும்.
- **மனத்தூய்மை உள்ளவன், வாக்கை நிறைவேற்றுபவன், கண்ணியமானவன், உண்மையாக நடந்து கொள்ளுபவர்கள்** இந்த நான்கு வகையான நட்புகளை எக்காரணம் கொண்டும் இழக்கக் கூடாது.
- **தந்தை, தாய், சகோதரன், சகோதரி** இந்த நான்கு பேரை எந்த காரணம் கொண்டும் வெறுத்து ஒதுக்க கூடாது.
- **பொய்யன், துரோகி, பொறமைக்காரன், மமதை பிடித்தவன்** இந்த நான்கு நபரால் ஒரு கோடி ரூபாய் கிடைக்கும் என்றாலும் கூட அதிகம் நட்பு பாராட்டாமல் முடிந்த அளவு ஒதுங்கியே இருக்கவேண்டும்.
- **மடையன், சுயநலக்காரன், முட்டாள், ஓய்வாக இருப்பவன்** இந்த நான்கு நபர்களிடம் வீணாக வாதங்களோ, அறிவுரைகளையோ ஒரு அளவிற்கு மேல் வழங்கக் கூடாது.
- **அனாதை, ஏழை, முதியவர்கள், நோயாளிகள்** ஆகியோர்களிடம் எந்த காரணத்தைக் கொண்டும் கடினமாக நடந்து கொள்ளக் கூடாது.
- **மனைவி, பிள்ளை, குடும்பம், நமது சேவகர்கள்** இந்த நான்கு பேருக்கும் எக்காரணம் கொண்டும் கணக்கு பார்த்துசெலவழிக்கக் கூடாது, அவர் தேவைகளை பூர்த்தி செய்வதில் சுணக்கம் காட் டக்கூடாது.
- **பொறுமை, சாந்த குணம், அறிவு, அன்பு** இந்த நான்கையும் எக்காரணம் கொண்டும், எந்த இடத்திலும் இழக்கக் கூடாது.

இந்த நாலு விஷயங்களுக்கு வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுத்தால் வாழ்வு சிறக்கும்.




அற்புதமான தகவல்களுடன்,

ஆன்மிகமலர்.காம் வழங்கும்

2023-ம் ஆண்டு மாத காலண்டர்

அற்புத தகவல்களுடன் தயராகிறது

குறைந்த விலையில் 100, 200, 500, 1000

எண்ணிக்கையில் தேவைப்படுபவர்கள்

தொடர்பு கொள்ளவும்

**மேலும் தகவல்களுக்கு: 9994162182**

# ருத்ரனின் அம்சமான ருத்ராட்சம்


www.aanmeegamalar.com

அனைத்துவித ஸ்தோத்திரங்களை உச்சரிப்பதன் மூலமும், விரதங்களை அனுசரிப்பதன் மூலமும் அடைகின்ற பலனை,ஒருவன் ருத்ராட்சத்தை அணிந்து கொள்வதன் மூலம் பெறுவான்.

ருத்ராட்ச மாலையை அணிந்தவருக்கு ஒருவன் உணவு அளிப்பானாகில், அவனது 21 தலைமுறை மக்களும் பாவங்களிலிருந்து விடுபட்டு ருத்ரலோகத்தை அடைவார்கள்.

சண்டாளனாகப் பிறந்தவனும், ருத்ராட்சத் தோடு தொடர்பு கொள்வானாயின் அவனது பாவங்கள் அவனை விட்டு விலகி ஓடிவிடும்.

கள் உண்பவனும், மாமிசம் உண்பவனுமாகிய பாவியின் தலையில் ருத்ராட்சம் படுமேயானால் அவனது பாவங்கள் அனைத்தும் விலகும்.

ருத்ராட்சமாலையை ஒருவன் வெறுமனே கையில் பிடித்திருந்தாலும், நான்கு வேதங்கயைும், சாஸ்திரங்களையும், உபநிடதங்களையும் கற்றறிந்தவனைவிட சிறப்பு பெறுவான்.அனைத்துக் கல்வி வேள்விகளும் அவன் வசமாகின்றன. பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனைவிட அதிக பலனைப் பெறுகிறான்.

ஒருவன் மரணம் அடையும் தருவாயில் ருத்ராட்சத்தை தரித்துக் கொண்டிருப்பானாகில், அவன் இறந்தபின் ருத்ர லோகத்தை அடைகிறான்.

பிறப்பால் ஒருவன் பிராமணனோ அல்லது சண்டாளனோ அல்லது மிலேச்சனோ; உண்ணக் கூடாததை உண்பவனோ யாராகிலும் அவன் ருத்ராட்சத்தை அணிவானாகில் அவன் ருத்ரனுக்கு இணையாகிறான்.

ருத்ராட்சத்தைத் தலையில் தரிப்பவன் கோடி புண்ணியங்களைப் பெறுவான். காதுகளில் அணிபவன் பத்துகோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;கழுத்தில் அணிபவன் நூறுகோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்; பூணூலில் அணிபவன் ஆயிரம் கோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;கைகளில் அணிபவன் லட்சம் கோடிப் புண்ணியத்தைப் பெறுகிறான்; இடுப்பில் அணிபவன் மோட்சத்தை அடைகிறான்.

குழந்தைகள் ருத்ராட்சம் அணிந்தால் ஜீரணம் சரியாக இருக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும், கல்வியை சிறந்த முறையில் பயில்வார்கள்.

கண், மூக்கு, தொண்டை, காது நோய்கள். மூளைக் கோளாறு, இருதயக் கோளாறு, நுரையீரல் கோளாறு, ஞாபக மறதி, நரம்புக் கோளாறு, ஆண் மலட்டுத்தன்மை, தைராய்டு சுரப்பிக் கோளாறு, ரத்த அழுத்தம், சளி தொந்தரவு, கல்லீரல் நோய், நீரிழிவு நோய், கருப்பைக் கோளாறு, சிறுநீரக நோய், தூக்கமின்மை, அஜீரணம், எலும்பு நோய்,




ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

இணையதளத்திற்கும்,
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்திற்கும்
விருப்ப சந்தா
செலுத்தி,
நமது இதழின் வளர்ச்சிக்கு
ஊக்கமளியுங்கள்

Scan to Pay
with any
BHIM UPI App





மூட்டுவலி, பக்கவாதம், அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுதல், வலிப்பு நோய், தீராத வயிற்று வலி, தோல் நோய், திக்கு வாய், உடல் பலவீனம் மற்றும் பல வகையான நோய் களுக்கு அவற்றிற்குரிய ருத்ராட்சம் எது என அறிந்து அதற்குரிய ருத்ராட் சத்தை அணிந்தால் விரைவில் பயன்தரும்.

ருத்ராட்சத்தை அணிந்தவாறு, வேத நியமங் களை ஒருவன் கடைபிடிப்பானாகில் அவன் பெறும் பலன்களை அளவிட முடியாது;

கழுத்தில் ருத்ராட்ச மாலையை அணிந்தவன் இந்த உலகத்தளைகளிலிருந்து விடுபடுகிறான்.

ருத்ராட்சம் அணிந்தவன் சிவபெருமானைப் போலவே முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் வணங்கப்படுகிறான்.

ருத்ராட்சத்தைத் தலையில் தரித்து ஒருவன் நீராடுவான் எனில், ருத்ராட்சத்தைத் தொட்ட நீர் அவன் உடலைத் தீண்டுமாயின், அது கங்கையில் நீராடியதைவிட அதிகப்புண்ணியப்பலன்களைத் தரும்.

எவ்வித மந்திரங்களை உச்சரிக்காதவனும், எவ்வித யாகங்களைச் செய்யாதவனும் கூட ருத்ராட்ச மணிகளை வெறுமனே தொடு வதன்மூலம் தன் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டு மறுபிறவியில் ருத்ரனாகவே அவதரிக் கிறான்.

ருத்ராட்சத்தை அணிபவனும், வழிபடுபவனும் சம்சார பந்தங்களிலிருந்து விடுபட்டு, தொடர விருக்கும் அனேக கோடி பிறப்புகளிலிருந்தும் விடுபடுகிறான்.

ருத்ராட்சம் அணிந்த ஒருவனுக்கு உணவும், உடையும் தருபவனும், ருத்ராட்சம் அணிந்த சிவனடியார்களின் பாதங்களைக் கழுவிய நீரை தீர்த்தமாக ஏற்றுக்கொள்பவனும் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு, சிவலோகத்தை அடைகிறான்.

நம்பிக்கையோடும், நம்பிக்கையில்லாமலும் ருத்ராட்சத்தை அணிந்துகொள்பவன் ருத்ர அம்சத்தைப் பெறுகிறான்.

ருத்ராட்சத்தின் மகிமையை என்னாலும் விளக்கிக் கூற முடியாது என்று சிவபெருமான் தேவிக்கு உரைத்ததாக ஸ்ரீமத் தேவிபாகவதம் கூறுகிறது.

ருத்ராட்சம் என்ற சொல் ருத்ரனையே குறிப்பதாக இருப்பதால் இந்த ருத்ராட்சத்தை சிவபெருமானுக்கு இணையான மதிப்பளித்து போற்றி பாதுகாக்க வேண்டும்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

சந்தா அனுப்புபவர்கள்,
கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்
வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# இறைவனின் இயற்கை மறைவாகவே இருக்கிறது

உலகம் என்பது ஒரு பெரிய நீதிவளாகம். அதிலே படைப்பு என்பதை செய்யும் பொழுது கடவுள் ஒவ்வொரு மனிதனின் இயற்கைத் தன்மைக்கு ஏற்ப ஒவ்வொரு உயிரின் குணச்சித்திரங்களையும் வார்த்து எடுத்து வெளியே காட்டுகிறான். இது ஆண்டவனின் நீதி வழங்கும் சொந்த எண்ணமாகும். நம்முடைய எண்ணப்படி நாம் தோன்றுவதே இல்லை. எல்லாம் அவன் செயலே.

❖ ❖ ❖

ஒரு உண்மையான நீதிபதியின் நீதி போன்றது எது தெரியுமா? எல்லாம் வல்ல இறைவனின் தெளிவும் எண்ணமுமே ஆகும். இதுவே சர்வ வல்லமை படைத்த கடவுளின் குரல் ஆகும்.

❖ ❖ ❖

மேற்கண்ட சர்வ வல்லமை படைத்த எண்ணம் போன்றே சர்வ வல்லமை படைத்த வழக்குரைஞர்களின் எண்ணங்கள் நமக்கு வல்லமை கொண்டதாகத் தோன்றுகின்றன. இதனால் நாமும் அவர்களை வாதாடச் சொல்லுகிறோம். நம்மைப் போன்றே நீதிபதிகளும் தங்களது முடிவை சரியானதாக எண்ணுகிறார்கள். இந்த இயற்கை எப்படி நிலவுகிறது என்றே எனக்குத் தெரியவில்லை. இறைவனின் இயற்கை மறைவாகவே இருக்கிறது என்பதால் தான் ஆச்சரியமே கொள்ளுகிறேன். பிறர் எப்படி நினைக்க வேண்டும் என்று சொல்லுங்கள்?

❖ ❖ ❖

தூக்கு தண்டனையை வழங்கும் பொழுது நீதிபதி தலையில் கருப்பு தொப்பியை அணிய



வழக்குரைஞர்கள் மேலே கருப்பு அங்கியை அணிவது எதற்காக என்று யோசித்தேன். நமது மேலோர்கள் அனைவருமே ஆகாயத்திலிருந்து உண்மை வெளிப்பட வேண்டும் என்று உளமாற வருந்துகிறார்கள் என்பதே இதற்கு குறிப்பாக இருக்கலாம்.

❖ ❖ ❖

உனது அலமாரியில் இருக்கின்ற புத்தகம் பத்திரமாக இருப்பதோடு அல்லாமல் அதனுடைய பத்திரமான நிரந்தரத்திற்கும் அது அங்கே உள்ளது. ஆனால் புத்தகம் போன்றே பெரிய மனிதனாகிய உனது பாதுகாப்பும் நிரந்தரத் தன்மையும் உலகில் எங்கே இருக்கிறது? எங்குமே இல்லை அதனால் எப்பொழுதும் பணிவாய் இரு.

❖ ❖ ❖

காதலும் காமமும் ஒன்றுக்கொன்று வேறு வேறானது. காதல் தோட்டத்து மலர் என்றால் காமம் ஒரு கண்ணாடிக் கோப்பையிலுள்ள ஒரு சத்துள்ள இரசமாகும். கோப்பையின் சத்து அனுபவத்திற்குரியது. மற்றொன்று அன்பிற்குரியது.

❖ ❖ ❖

அட்டைகள் உயிருள்ள பிராணிகளின் மீது ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சி விடுகின்றன. இதுபோல குழந்தைகள் பால் குடிக்கிறார்கள். பாசத் தொடர்பு இப்படித்தான் ஏற்படுகிறது. ஒட்டுண் ணிகள் என்ற காளான்களும் வளர்ந்த வேறொரு மரத்தின் மீது வளர்ந்து அதன் சக்தியால் வாழ்ந்து விடுகின்றன. இதுபோல ஒவ்வொருவராலும் நாம்





ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

www.aanmeegamalar.com


ஒவ்வொருவரும் வாழ்ந்து விடுகிறோம்.
இப்படியும் ஒரு உலகம் உள்ளது.

❖ ❖ ❖

எக்கருத்தை எப்படி விளக்கினாலும் குழந்தைப் பருவத்தில் நாம் பிறரை நம்பியே வாழ வேண்டும். இது தவிர்க்க முடியாதது. அதை எப்படிக் குறை சொல்ல முடியும்? ஆனால் சுதந்திரமான தனித் தன்மையில் வாழ்வது மனிதனின் உழைக்கின்ற இயற்கைத் தன்மையாகும். உழைப்பு என்பது இயற்கைத் தன்மை. தாறுமாறான நிலை என்பது கொடுமை. ஜனநாயகம் என்பது உழைப்பு. ஆதிக் கத்தன்மை என்பது உறுதி. அரசத்தன்மை என்பது மக்கள் காட்டும் அன்பு, நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது படிப்பு, தேர்ந்தெடுப்பது என்பது மனிதன் ஊசலாடும் தன்மை.

❖ ❖ ❖

நமது நாட்டிற்கு ஒரு வரையறுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை என்பது கிடையவே கிடையாது. இதனால் உலகில் பிறநாடுகள் இந்தியாவைக் காட்டிலும் வேறுபட்டு நிற்கின்றன. நம்மின் இத்தன்மைக்கு காரணம் என்ன தெரியுமா? நமது செயலின்மையும் நம்மை நாமே ஒவ்வொருவரையும் குழப்பிக் குழப்பி குழம்பி மாற்றி அமைக்கின்ற சமுதாயத்தால் அன்றோ இவை ஏற்படுகின்றது?

❖ ❖ ❖

தன்னாட்சி கொண்ட சுதந்திரமான நாடு பொரு ளாதாரத் துறையில் ஆரம்பப் பள்ளியில் இருப்பதைப் போன்று ஆகும். ஆனால் நம்முடைய நாடோ ஆரம்பப்பள்ளியில் இல்லை. அதற்கும் கீழே உள்ள குழந்தைகளை வளர்க்கின்ற தாதிப் பள்ளியில் உள்ளது.

❖ ❖ ❖

6. எந்தவித பொருளாதார வரைவுக் கொள்கையுமே இல்லாமல் நாம் உயரமாகவும் பேசுகிறோம். உயர்த்தியும் பேசுகிறோம். சிறிது தூரம் நடந்து வேலை செய்வதைப் போன்று ஒரு குறிப்பிட்ட கொள்கை ஒரு தேசத்திற்கு சொர்க்கமாகும்.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# ஆன்மிகமலர்
## மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க







# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்







# வசிஷ்ட முனிவருக்கு காமதேனுவை கொடுத்த சிவஸ்தலம்

சென்னை ஆவடி சாலையில் திருமுல்லை வாயில் உள்ளது. பூந்தமல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் செல்லும் பேருந்தில் சென்றால் ஆவடியை அடுத்து, திருமுல்லை வாயிலை அடைந்து 1 கி.மீ. சென்று கோயிலை அடையலாம்.

வாளால் வெட்டப்பட்டதால் மாசிலாமணீஸ்வரர் குளிர்ச்சி வேண்டி எப்போதும் சந்தனக் காப்பி லேயே காட்சி தருகிறார். வருடத்திற்கு ஒருமுறை சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தன்று மட்டும் பழையது நீக்கி புதிய சந்தனக் காப்பு சாத்தப்படும்.

மூலவர் அற்புதமான சுயம்பு மூர்த்தி; உயரமான லிங்கம். மேற்புறம் வெட்டுப்பட்டுள்ளது.

- தேவாரப்பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களில் இது 22வது தலம்.
- சிவனின் தேவாரப் பாடல் பெற்ற 274 சிவா லயங்களில் இது 255 வது தேவாரத்தலம் ஆகும்.
- இறைவன்பெயர்: நிர்மலமணீஸ்வரர், பாசுபதேஸ்வரர், மாசிலாமணீஸ்வரர்.
- இறைவியார் திருப்பெயர்: லதாமத்யாம்பாள், கொடையிடைநாயகி, கொடியிடையம்மை.
- தல மரம்: முல்லை.
- தீர்த்தம்: கல்யாண தீர்த்தம்.

தலவரலாறு

இது தொண்டை நாட்டுத் தலம்; (வட) திருமுல் லைவாயில் ஆகும்; சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் (தென்) திருமுல்லைவாயில் உள்ளது குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த தொண்டை நாட்டின் அரசன் தொண்டைமான் ஒரு முறை அவனது எதிரி குறும்பர்களால் போரில் தோற்கடிக்கப்பட்டான். போரில் தோல்வி யுற்ற தொண்டைமான் தனது யானையின் மீது மிகவும் மனம் நொந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது, யானையின் கால்களை முல்லைக் கொடிகள்




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com






சுற்றிக்கொண்டன. யானை முன்னேறிச் செல்ல மிகவும் கஷ்டப்பட்டதால் தொண்டைமான் தனது வாளினால் முல்லைகை கொடிகளை வெட்டி யானை முன்னேறிச் செல்ல வழி ஏற்படுத்தினான்.

அப்போது வாள் பட்டு முல்லைக்கொடி களின் கீழிருந்து இரத்தம் வருவதை கண்டான். யானையிலிருந்து கீழே இறங்கி முல்லைக் கொடிகளை விலக்கிப் பார்த்தபோது அங்கு ஒரு சிவலிங்கம் இருப்பதை பார்த்தான். இறைவனை வணங்கி தான் செய்த தவறை பொருத்துக் கொள்ளும்படி அவரிடம் வேண்டினான். இறைவன் அவன்முன் தோன்றி அரசனை வாழ்த்தி அருளி அவனுக்குத் துணை யாக நந்தியம் பெருமானையும் போருக்குஅனுப்பி னார்.

அரசன் குறும்பர்களுடன் மறுபடியும் போர் செய்து அதில் அவர்களை வென்று தனக்கு உதவி செய்த இறைவனின் கருணையைப் போற்றி சிவபெருமானுக்கு அவ்விடத்தில் ஒரு ஆலயம் எழுப்பினான். குறும்பர்களை வென்று அவர்கள் கோட்டையிலிருந்து கொண்டுவந்த இரண்டு வெள்ளெ ருக்கு தூண்களை தான் எழுப்பிய சிவாலயத்தில் இறைவனின்






கருவறை முன்பு பொருத்தி வைத்தான். அதுவே இந்த மாசிலாமணி ஈஸ்வரர் ஆலயம் என்று தல வரலாறு கூறுகிறது மூலவர் கருவறை முன்பு அந்த இரண்டு வெள்ளெருக்கு தூண்களை இன்றும் காணலாம்.

தெற்கில் உள்ள ராஜகோபுரம் இவ்வாலயத்தின் நுழைவு வாயிலாகும். தெற்கு கோபுரத்திற்கு முன் ஒரு 16 கால் மண்டபம் உள்ளது கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றவுடன் பிரசன்ன கணபதி நம்மை வரவேற்கிறார். தெற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள மற்றொரு நுழைவு வாயில் வழியாக உள்ளே சென்றால் முதலில் இறைவி கொடியிடை நாயகி சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. அதை கடந்து மேலும் சென்றால் இறைவன் மாசிலாமணி ஈஸ்வரர் சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. இறைவன் மற்றும் இறைவி இரண்டும் கிழக்கு நோக்கி இருப்பதும், இறைவி கொடியிடை நாயகியின் சந்நிதி இறைவன் சந்நிதிக்கு வலப்புறம் இருப் பதும் இக்கோவிலின் ஒரு சிறப்பம்சமாகும்.

தொண்டைமானுக்கு உதவி செய்ய புறப்படும் நிலையில் நந்தி சிவபெருமானை நோக்கி இல்லா மல் கோவில் வாசலை நோக்கி திரும்பி உள்ளது.

இறைவன் கருவறை சுற்றுப் பிரகாரத்தில் மேற்குச் சுற்றில் நால்வர் திருஉருவங்கள்உள்ளன. மேலும் மேற்குச் சுற்றுச் சுவரில் 63 நாயன்மார்கள் உருவங்கள் சித்திரங்களாக காட்சி அளிக்கின் றன. கருவறையின் வடக்குச் சுற்றில் நடராஜர் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. இத்தலத்து இறைவி கொடியிடை அம்மனை பௌர்ணமி நாளில் மாலை வேளையில் வழிபடுவது மிகவும் விஷேசமாக கருதப்படுகிறது.

இத்தலத்தில் முருகபெருமான் ஒரு திருமுகத் துடனும், நான்கு திருக்கரங்களுடனும், தனது தேவியர் இருவருடன் எழுந்தருளி யுள்ளார். இத்தல முருகப்பெருமானை அருண கிரிநாதர் தனது திருப்புகழில் பாடி யுள்ளார்.

திருப்புகழில் இத்தலத்து முருகன் மீது மூன்று பாடல்கள் உள்ளன. இக்கோவிலில் நவக்கிரகங்களுக்கு தனி சந்நிதி கிடையாது. வசிஷ்ட முனிவர் இத்தலத்திற்கு வந்து தவம் செய்து தெய்வீகப் பசுகாமதேனுவை பெற்றார் என்று புராணங்கள் தெரி விக்கின்றன.


சிவத்திரு.குமரேசன்

மூலவர் அற்புதமான சுயம்பு மூர்த்தி; உயரமான லிங்கம். மேற் புறம் வெட்டுப் பட்டுள்ளது.

எப்போதும் சந்தனம் சார்த்தப்பட்டிருக்கும், ஆதலால் அபிஷேகங்கள் சிரசில் கிடை யாது; ஆவுடையாருக்கு மட்டும் தான். வருடத்திற் கொருமுறை சித்திரை சதயத்தில் சந்தனக் காப்பு களைப்பபட்டு மீண்டும் சார்த்தப்படுகிறது. அது அடுத்த சித்திரை சதயம் வரை அப்படியே சுவாமி மீது இருக்கும். சுவாமிக்கு, வெந்நீர் அபிஷேகம். அபிஷேக காலங்களில் மேன்மேலும் சந்தனம் சார்த்தப்படும்; ஆனால் களையப்படுவதில்லை. இதனால் சுவாமி மீது எப்போதும் சந்தனக் காப்பு இருந்து கொண் டே இருக்கும்.

இத்தலத்தில்தான் சிறப்புமிக்க வைஷ்ணவி ஆலயமும், பிரார்த்தனைக் கோயிலாகிய 'பச்சை யம்மன் கோயிலும்' உள்ளன. இக்கோயில்தொடர் பாகச் சொல்லப்படும் செவிவழிச் செய்தியொன்று வருமாறு:

சென்னைப் பொன்னேரிப் பாதையில் மீஞ் சூருக்கு அருகில் உள்ள மேலூரில்வீற்றிருக்கும் திருவுடை நாயகியம்மை; சென்னை திருவொற்றி யூரில் வீற்றிருக்கும் வடிவுடையம்மை;இத்தலத்து கொடியிடை அம்மை ஆகிய மூன்று திருவுரு வங்களும் ஒரே ஸ்தபதியால் செய்யப் பட்டவை என்றும்; வெள்ளிக்கிழமை பௌர்ணமி சேர்ந்து வரும் நாளில் இம்மூன்று அம்பிகைகளையும் ஒரே நாளில் முறையே காலையி லும், நண்பகலிலும், மாலையிலும் தரிசித்தல் பெருஞ் சிறப்பு என்றும் சொல்லப்படுகிறது.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி,
சென்னை, போன்: 919003296221
easanaithedi.in







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

53

நான் ஸ்தூல சரீரத்தில் விழிப்புநிலையில் இருக்கிறேன். நான் இரவில் உறக்கத்தில் கனவு நிலையில் இருந்தேன். நான் இன்று கவலையில்லாமல் ஆழ்ந்து உறங்கினேன். இந்த ‘நான்’ என்பது நமது மனதைத்தான் குறிக்கிறது. நான் விழித்துக் கொண்டிருந்தேன். நான் உறக்கத்தில் கனவு கண்டு கொண்டிருந்தேன். நான் கவலையில்லாமல் ஆனந்தமாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தேன். மூன்று அவஸ்தைகளில் மூன்று சரீரங்களில் இருந்தவன் ‘நான்’ என்ற ஒரே மனம்தான். இந்த ‘நான் என்ற எண்ணம்’ அவன் ஸ்தூல உடலில் விழிப்புநிலை என்ற அவஸ்தையில் இருக்கும்போதுதான் மூன்று அவஸ்தைகளில் அவனது மனம் இருந்ததைப்பற்றி மற்றவர்களிடம் கூறவோ அல்லது தனக்குள் நினைக்கவோ அறிந்து கொள்வதற்கும் முடியும்.

ஒரு மனிதன் விழித்துக்கொண்டு இருக்கிறான் என்றால் அவன் மனம் விழிப்பு நிலையில் இருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டும். அதே மனிதன் உறக்கத்தில் கனவுநிலையில் இருக்கிறான் என்றால் அவன் மனம் உறக்கத்தில் கனவு உலகத்தை கண்டு களித்துக் கொண்டு இருக்கிறது. மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறான் என்றால் அவன் மனம் காரண சரீரத்துக்குள் ஒடுங்கி ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டும்.

மனிதனுடைய ஆழ்ந்த உறக்கம் என்பது அவன் மனம் காரண சரீரத்தில் ஒடுங்கி விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு ஒடுங்கிய அவன் மனம் விழித்துக் கொள்ளும்போதுதான் அவன் கனவு கண்டதையும் ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தமாக இருந்தது பற்றியும் கூறவோ நினைக்கவோ அவன் பெற்ற அனுபவங்களைப்பற்றி மற்றவர்களிடம் விளக்கிக் கூறுவதற்கு முடியும்.

மூன்று அவஸ்தைகளிலும் மாறாமல் எவனொருவன் சாட்சியாக இருந்து விழிப்புநிலை, கனவு நிலை, ஆழ்ந்த உறக்கத்தையும் பார்த்துக் கொண்டு மாறாமல் நிலையாக இருப்பவன் எவனோ அவன்தான் ஆத்மா. மூன்று அவஸ்தை நிலைகளிலும் அவன் சாட்சியாக இருந்து பார்த்துக்கொண்டு அழிவில்லாமல் இருப்பவன் ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த நான் என்பது ஒரே நபராக மூன்று நிலைகளிலும் இருந்து வந்துள்ளான். எனவே மூன்று அவஸ்தைகளிலும் சாட்சியாக இருப்பவன் ‘நான்’ என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த ‘நான்’ என்பது மாறாமல் அழிவில்லாமல் சாட்சியாக மட்டும் இருப்பவன் எவனோ அவன்தான் ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனிதன் ஸ்தூல சரீரத்தில் அபிமானம் வைத்திருக்கும்போது விழிப்புநிலையில் இருந்த ‘நான்’ என்பது வந்து விடுகிறது. சூக்ம சரீரத்தில் மனம் அபிமானம் வைக்கும்போது கனவு நிலைக்கு இந்த ‘நான்’ என்பது வந்து விடுகிறது. அதேபோல் நாம் காரண சரீரத்தில் அபிமானம் வைக்கும்போது மனம் சூக்மத்திலிருந்து காரண சரீரத்திற்கு இந்த ‘நான்’ என்பது மாறி விடுகிறது.

உலகில் மனிதன் மனதில் துன்பத்தையோ இன்பத்தையோ ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு மனம் குழப்பத்தில் இருக்கும்போது அவனுக்கு ஆழ்ந்த உறக்கம் என்ற அவஸ்தைநிலை வருவதில்லை. அதாவது அவன் மனம் காரண சரீரத்தில் அப்போது ஒடுங்குவதில்லை. மனிதனுடைய மனம் காரண சரீரத்தில் ஒடுங்கினால் மட்டும் ஆழ்ந்த உறக்கத்தில் ஆனந்தமாக இருக்கலாம்.

எந்தப்பொருள் கூட்டாக சேர்ந்து நமது சொரூபமாக இருக்கிறதோ அதனை நம்மிடமிருந்து தனியாகப் பிரித்துக் கொள்ள



முடியாது. எடுத்துக்காட்டாக உடலில் ஒரு அங்கமாகிய கையை வீட்டில் மறந்து வைத்து விட்டு வந்து விட்டேன் என்று யாரிடமும் நாம் கூற முடியாது. அதேபோல் நமது சரீரத்தில் இருக்கும் எந்த ஒரு உறுப்பையும் மறந்து வைத்து விட்டேன் என்று கூற முடியாது. நமது கை , கால்கள் போன்ற மற்ற உறுப்புகள் எல்லாம் ஒரு அங்கமாக உடலில் இருக்கிறது. அவைகள் ஒரு அங்கமாக எப்போதும் ஸ்தூல உடலில் சேர்ந்தே இருக்கிறது. பேனா, வாட்ச் போன்றவற்றை வீட்டில் மறந்து வைத்து விட்டு வந்து விட்டேன் என்பதுபோல் உடல் அங்கத்தைப் பற்றி அவ்வாறு கூற முடியாது.

நமது ஸ்தூல உடலை மனதளவில் விடுவதற்கு நம்மால் முடியும். அவ்வாறு மனதால் விடும்போதுதான் நாம் உறக்கத்தில் நமது சூக்ம உடல் கனவு நிலைக்கு வரமுடியும். அதேபோல் சூக்ம உடலை மனதளவில் விடும்போதுதான் மனம் காரண சரீரத்துடன் ஒடுங்கி ஆழ்ந்த உறக்கத்தில் செல்வதற்கு முடியும் என்று சாஸ்திரம் விளக்கிக் கூறுகிறது.

மூன்று சரீரங்களுக்கு அநாத்மாக்களுக்கு அப்பாற்பட்டு சாட்சியாக மட்டும் இருப்பது ஆத்மா ஆகும். ஸ்தூல உடலில் உள்ள அபிமானத்தை விடும்போதுதான் மனம் சூக்ம நிலைக்குச் செல்வதற்கு முடியும். அதேபோல் காரண சரீரத்தின் அபிமானத்தை விடும்போதுதான் விழிப்புநிலை, கனவுநிலை, ஆழ்ந்த உறக்கநிலைக்கு நாம் செல்வதற்கு முடியும். ஆத்மா என்பது மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக இருந்து கண்காணிப்பது, மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாற்பட்டது ஆத்மா ஆகும்.

நான் என்பது மூன்று சரீரங்களுக்கும் சாட்சியாக இருந்து கண்காணிப்பது ஆத்மா ஆகும். 'நான்' என்பதை நமது உடலை மனதில் நினைத்துத்தான் கூறுகிறோம். நான் என்பது மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாற்பட்டு அழிவில்லாத பரம்பொருள் ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. மூன்று சரீரங்களுக்கும் அவஸ்தைகளுக்கும் சாட்சியாக இருந்து அழிவில்லாமல் இருப்பது ஆத்மா.

நாம் மூன்று சரீரங்களையும் மூன்று அவஸ்தைகளையும் நமது மனம் 'நான்' என்று எண்ணிக்கொண்டு இருப்பதால்தான் இன்ப துன்பங்கள் போன்றவற்றை நாம் அனுபவவிக்கிறோம். மூன்று சரீரங்களையும் மூன்று அவஸ்தைகளையும் 'நான்' என்று எண்ணாமல் இருப்பதற்கு ஆன்மீக வழியில் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு ஆன்மீக வழியில் 'நான் என்பது நமது உடல் அல்ல' என்று மனம் நினைக்கும்போது துன்பங்களில் இருந்து விடுதலை பெற்று நமது மனம் இயல்பாக அமைதி அடைந்து விடும்.


• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

உலக இன்ப துன்பங்களில் நமது மனம் ஈடுபடாமல் இருந்து, அந்த சம்பவத்தை மட்டும் பார்த்துக்கொண்டு இருக்கும்போது அவன் சாட்சி என்று அழைக்கப்படுகிறான். உலகில் காணும் சம்பவங்களில் நாம் ஈடுபடாமல் அந்த சம்பவங்களினால் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பவன் சாட்சிக்காரனாகக் கருதப்படுகிறான்.

இந்த உலகத்தில் காணும் இன்ப துன்பங்களை நாம் சாட்சியாக இருந்து மட்டும் அவற்றை அனுபவவித்துக்கொண்டு வரவேண்டும். அதாவது நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை ஸ்தூல உடலும் மனமும் அனுபவவிக்கிறது. அவற்றை நாம் சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற ஞானம் வந்து விட்டால் நமது மனம் எந்தவிதமான துன்பமும் அடைவதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் இந்த உலகத்தில் காணும் இன்ப துன்ப அனுபவங்களில் நாம் சாட்சியாக இல்லாமல் நடக்கும் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவனாக நமது மனம் எண்ணும்போது உன்னோட மனம் துன்பத்தில் ஆழ்ந்து விடும். எனவே நீ துன்பத்தில் இருந்து விடுதலை அடைய முடியாது.

நாம் உலகத்தில் நடக்கும் சம்பவங்களை சாட்சியாக இருந்து இந்த உலகத்தைப் பார்க்க வேண்டும். அதாவது உலகத்தில் நடைபெறும் செயல்பாடுகளை சாட்சியாக இருந்து மட்டும் பார்த்தால் அமைதி கிடைக்கும். உலகத்தின் செயல்பாடுகளில் உன் மனம் முழுமையாக ஈடுபடும்போது நீ எதிர்பாராத துன்பங்களை அடையும் நிலைக்கு வரலாம்.

அப்போது நமக்கு ஏற்பட்டுள்ள துன்பத்துக்குக் காரணம் பிறர் மீது வீண் பழி கூறாமல் கோபப்படாமல் இருக்க வேண்டும். தீதும் நன்றும் பிறர் தரா வாரா என்பதை நினைவு கூர்ந்து பொறுமையைக் கையாள வேண்டும். எனவே உலக வாழ்வில் இன்ப துன்பங்களில் தாமரை இலைத் தண்ணீர்போல் இருக்க வேண்டும். ஜனக மன்னன் மிதிலையை பற்றற்று முறையில் ஆட்சி புரிந்து வந்தார் என்று இராமாயணம் என்னும் இதிகாச வரலாறு கூறுகிறது.

நமது ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம்,



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

காரண சரீரமாக இருந்து மூன்று அவஸ்தைகளில் செயல்படுகிறது. மூன்று உடல்களையும் மூன்று அவஸ்தைகளையும் நான் என்று எண்ணாமல் அதன் செயல்பாடுகளுக்கு மட்டும் சாட்சியாக இருக்கிறேன் என்று மனதில் எண்ணிக்கொள்ள வேண்டும். அவ்வாறு மனம் எண்ணும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி ஆனந்தம் எல்லாம் கிடைக்கும்.

நாம் எளிதில் 'நான்' என்று மனம் எண்ணுவதிலிருந்து விடுபட்டு விடலாம் என்று எண்ணுகிறோம். நான் என்பதை நாம் மூன்று சரீரங்களின் மீது இடைவிடாது அபிமானம் பற்று வைத்திருப்பதால்தான் சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி உலகில் காணும் செயல்பாடுகளை சாட்சியாக இருந்து நாம் பார்க்க முடிவதில்லை. அதற்கு நாம் ஆன்மீக வழியில் சென்று மனம் பக்குவநிலைக்கு வர வேண்டும். மனிதன் தன்னுடைய ஒவ்வொரு செயலையும் நான் செய்கிறேன். என்னால் செய்யப்பட்டது என்று மூன்று சரீரங்களையும் நான் என்று மனதில் இயல்பாக எண்ணுகிறான்.

அவற்றிலிருந்து முழுமையாக விடுபட்டு உலக இன்ப துன்பங்களுக்கு சாட்சியாக இருக்கவேண்டும் என்ற மனநிலை நம்மிடம் இருப்பதில்லை. அவ்வாறு சாட்சியாக இருப்பதற்கு பொறுமை அவசியம் இருக்க வேண்டும். பொறுத்தார் பூமி ஆள்வார் என்று நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். எனவே பொறுமையாக உலக இன்ப துன்பங்களுக்கு நாம் சாட்சியாக இருந்து செயல்பாடுகளை கவனிக்கும்போது நாம் துன்பங்களில் இருந்து எளிதில் விடுதலை பெற முடியும்.

www.aanmeegamalar.com

நமது ஸ்தூல, சூக்ம, காரண சரீரங்களை 'நான்' என்று மனதில் எண்ணாமல் நம் மனதை பக்குவப்படுத்துவதற்கு வேண்டும். அதற்கு நாம் ஆன்மீக வழியில் சென்று இந்த உடல் 'நான் அல்ல' என்ற மனநிலையை நமக்குள் கொண்டுவர வேண்டும். அவ்வாறு மனதை பக்குவபடுத்தும்போது துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று நமக்கு ஓரளவுக்கு அமைதி கிடைக்கும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த விரும்பும் வாசகர்கள்...










விருப்ப
## சந்தா

## UPI & வங்கி எண்
## வாயிலாகவும்
## சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**